68596

# வீர பத்தினிமார்

1930

Y15:2
N30:2
68596

1039

ஸ்ரீ

# வீர பத்தினிமார்

## (HEROINES OF IND)

(இரண்டாம் பாகம்)

24 FEB 193

பிரசுரகர்த்தர்:
இ. மா. கோபாலகிருஷ்ணக் கோன்,
மதுரை & சென்னை.
1930.

Y.15.2
N30.2
68596

[விலை அணா ௮.

715·2
N30·2
68596

PRINTED
AT VAMAN PRESS, 149, BROADWAY,
MADRAS.

3204
854·8 / 13



# முன்னுரை

உலக வாழ்வோ பேரலை பொருந்திய சாகரம் போலாகும். மலைபோல் உயரக் கிளம்பும் அலைகள் கொண்ட கடலைக் கடக்க நீராவிக் கப்பல் தேவையாவது போல், சம்சார சாகரத்தைக் கடக்க வீரமும் வலியும் அவசியம். வாழ்வில் மட்டுமின்றி வீழ்விலும் வீரம் விளங்குதல் வேண்டும். அத்தகைய வீரமும் வலியும் ஆடவருக்கே உரியன என்பர் சிலர். பெண்டிருக்கு அவ்விரு அருங்குணமும் இன்றேல் ஆடவருக்கு எங்ஙனம் வீரமும் வலியும் உதிக்கும்? மேலும், பெண்டிரே தம் மக்களுக்குக் குழந்தைப்பருவம் முதல் வீரப்பால் ஊட்டி வளர்த்துவரக் கடமைப்பட்டுள்ளோர் ஆவர். ஆதலின் பெண்டிரே வீரத்தின் வித்தாகவும் விளைநிலமாகவும் விளங்கும் உரிமை உடையோர். இங்ஙனமிருக்க, மாதரைப் பேதையர் எனவும் அபலைகள் எனவும் சிலர் இலேசாகப் பேசுதல் உண்டு. அத்தகையோருக்கு அறிவு கொளுத்தவும், இளஞ்சிறுவர் சிறுமியருக்கு வீரம் புகட்டவும், "வீர பத்தினிமார்" எனும் இந்நூல் வெளிவருகின்றது. விளையும் பயிருக்கு முளையிலேயே ஊட்டம் கொடுத்தல் வேண்டும் அல்லவா? அங்ஙனம் நம் பாலர் பாலிகைகளுக்கு வீரமும் வலியும் புகட்ட இந்நூல் உதவின், அஃதே நாம் எதிர்பார்க்கும் கைம் மாறாகும்.

# நூலடக்கம்


| எண் | விஷயம் | | பக்கம் |
|---|---|---|---|
| 1. | பத்தினி பத்மினி | ... | 1 |
| 2. | இராணி ஸம்யுக்தை | ... | 18 |
| 3. | தாரா பாய் | ... | 38 |
| 4. | இராணி சுந்தரவதி | ... | 54 |
| 5. | கிருஷ்ண குமாரி | ... | 72 |
| 6. | மகாராணி சந்திரமதி | ... | 100 |



24 FEB 1931


ஸ்ரீ

# வீர பத்தினிமார்

(இரண்டாம் பாகம்)

## 1. பத்தினி பத்மினி

ஆவலயம் போற்றும் குருக்ஷேத்திரம் தற்சமயம் டில்லி என வழங்குகின்றது. பதின் மூன்றும் நூற்றாண்டிலே அம் மாநகரில் ஏகசக்ராதிபதியாக விளங்கியவன் அல்லாவுதீன் எனப்படுவான்.

அவன் பெயரும் புகழும் படைத்தவன்; சேனையுடன் சென்றவிட மெல்லாம் சிறப்பெய்தியவன். நாடு பிடிப்பதில் அவனுக்கிருந்த ஆசைக்கு அளவு கிடையாது. மேலும் இராஜபுத்திர மங்கையரை மனைவியராகக் கொள்ள வேண்டு மென்ற அவா அவனுக்கு மிக அதிகம்.

மத்தியபதி மன்னவனாக ராணா இலக்குவன் எனப் படுவான் பட்டஞ் சூடிய காலை

யில் அவன் அரசாளும் வயது பெற்றிருக்க வில்லை; குழந்தையாகவே யிருந்தான். அச் சமயம் அவனது சிற்றப்பனே போஷகனுக வும் பிரதிநிதியாகவும் இருந்தவன்.

அச்சிறிய தந்தையின் பெயர் பீம சிம்மன். இவனுக்கு மிக்க அழகு வாய்ந்த மனைவி யொருத்தி யிருந்தனள். அவள் பெயர் பத்மினி. மங்கையரின் நலத்தையும் குணத்தையும் மதித்து, அவர்களை நம் முன்னோர், பத்மினி, சித்தினி, சங்கினி, அத்தினி என நால் வகையாக வகுத்துளர். அந்நால்வரில் பத்மினியே சிறந்தவளாம்.

பீமனது மனைவியோ தன் பெயருக் கேற்பப் பேரழகு பொருந்தியவள். அப் பேரழகை உவமை காட்டிக் கூறவா வென்றால், சொல் ஒக்குமே யொழியப் பொருள் ஒவ்வாது. அவளது பாதம் பட, மத்தியபதி பாக்கியம் படைத்த தென்னலாம். சுருங்கச் சொல்லின், அக்காலம் பாரத நாட்டிலிருந்த பெண்மணிகளுக் கெல்லாம் அவளே திலக மாவாள்.

அப்பட்டாணிய வாசன் பத்மினியின் பேரழகைக் கேள்விப் பட்டே மத்தியபதியின் தலை நகரான சித்தூரின்மீது படையெடுத்து



வந்தான். ஜானகியின் மீது இலங்கை வேந்தன் கண்வைத்தது போல், அல்லாவு தீனும் கண் வைத்தான் போலும்!

திரண்ட படையுடன் வந்து சித்தூரை மும்முரமாக முற்றுகை யிட்டும், இராஜபுத்திர சிம்மங்களின் முன்னே அவன் வீரம் நிற்க முடியவில்லை. தவிர அச்சமயம் சித்தூரைச் சுற்றி ஏறக்குறைய ஐம்பது கற் கோட்டைகள் இருந்தன. ஒவ்வொன்றும் ஒவ்வொரு மலையைப் போல் பட்டாணியச் சேனை வெள்ளத்தைத் தடுத்து நின்றது.

கோட்டையைக் குறுகினால், அம்பு மழை வந்தடிக்கும்; இராஜபுத்திர வீரரை யணுகி னாலோ, வாள் வீச்சு வதைக்கும். என்ன செய்வான் அல்லாவுதீன்! கோளரியினால் குலைக்கப் பட்ட குஞ்சரத்தைப் போல் அவன் கலங்கி நின்றான்.

இராஜ புத்திர வீரர்களும் சேதம் இல் லாமலில்லை. பலர் பராக்கிரமத்துடன் போர் புரிந்து வீர சுவர்க்கம் புகுந்தனர். அவர் களில் ஒருவரும் முதுகு காட்ட வில்லை. இங்ஙனம் நெடு நாள் போர் நிகழ்ந்ததில் இரு திறத்தினரும் களைத்துப் போயினர். யாருக்கும் வெற்றியுமில்லை; தோல்வியு

மில்லை. வெற்றி மாலை சூடிப் பத்மினியைக் கை பிடிக்கலா மென அப் பட்டாணியன் கொண்ட எண்ணம் மண்ணாயிற்று.

அவன் படை வகுப்பிலே பலரும் களப்பலி யாகிவிட்டனர். அது கண்டு அவன் கலங்கினனாயினும், பத்மினியின் மீதிருந்த ஆசையை மட்டும் கை விடவில்லை. ஆதலின், பத்மினியைக் கண்ணால் காணப் பெறின், கடும் போரை நிறுத்துவதாக அக் காவலன் தூது விடுத்தனன்.

இக் கோரிக்கையை இராஜபுத்திரர் எங்ஙனம் ஏற்றுக் கொள்ள முடியும்? கண்ணெதிரே காணப் பெறும் பாக்கியம் பெறாமல் போயினும், நிலைக் கண்ணாடியின் மூல மேனும் அழகைப் பருக அருள் புரிய வேண்டுமென மீண்டும் அவ் வேந்தன் தூது விடுத்தான்.

நெடுங் காலயாக நடந்த போரில் களைத்துப் போனதோ, குல வாலிபரிலே வீராதி வீரரான பலரைப் பறிகொடுத்ததோ, யாதோ அறிகிலோம்! அல்லாவுதீனுடைய வேண்டுகோளுக்கு இராஜ புத்திரர் சம்மதி தந்தனர். அவ்வளவில், அவன் சித்தூ



ருக்கு வந்தான் பத்மினியின் பிரதி பிம்பத்தைக் கண்டு களிக்க.

சக்கரவர்த்தியாக முடி சூடிய ஒருவன் பெண்ணரசி யொருத்தியின் பேரழகைக் கண்ணாடியில் கண்டு களிக்க வந்தான் என்றால், அவனது பேதை மதியை என்னென்று எடுத் துரைப்பது? வாலியும் வல்லரக்கரும் கோலமுடி மன்னவரும் கூடா ஒழுக்கம் காரணமாக குலைந்து போயின ரென்றால், அல்லாவுதின் எம் மாத்திரம்!

பகையரசனா யிருப்பினும், இராஜபுத்திரரின் சத்திய வாக்கை நம்பி, மெய் காவல் அதிக மின்றியே வந்தான் அல்லாவுதீன்; ஆடியின் மூலம் அவள் வடிவைக் கண்டு களித்ததும், திரும்பினான் தன் பாசறையை நோக்கி.

தங்கள் வாக்கை நம்பி மிக்க காவலின்றி வந்த வேந்தனை, பீம சிம்மன், கோரசிம்மன் முதலிய வீரர் சிறிது தூரம் தொடர்ந்து சென்று வழியனுப்பினர்; உள்ளங் களிக்க உபசார வார்த்தையும் உரைத்தனர். அல்லாவுதீனும் முகமன் கூறத் தவறவில்லை.

அங்ஙனம் இரு பக்கத்தினரும் உரை யாடிக் கொண்டே கோட்டையின் மதில் புற

மடைந்தனர். அச்சமயம் அருகே மறைந்திருந்த பட்டாணிய வீரர்கள் திடீரென அங்குத் தோன்றி நம் பீம சிம்மனைச் சிறை செய்து சென்று விட்டார்கள். அல்லாவுதீனும் தக்க மெய் காவல் பெற்று மகிழ்வுடன் போயினன்.

போயின பின், அவன் "பத்மினியை மரியாதையாக அனுப்பித் தரின், பீம சிம்மன் உயிர் தப்புவான், அவனுக்கு விடுதலையும் கிடைக்கும். இல்லையேல், அவன் இரண்டையும் இழக்க நேரும்; சித்தூரும் சின்னபின்ன மாகும்" என்று கடிதம் விடுத்தான் கம்பீரமாக.

பகைவன் கையில் பீம சிம்மன் பட்டதையும், பத்மினியை யனுப்பாமல் போயின், பேராபத்து நேரு மென்பதையும், உணர்ந்தவுடனே சித்தூர் வாசிகள் தீயில் விழுந்த புழுவே போல் துடித்தார்கள்.

பத்மினியை இழந்து மானத்தைப் பறி கொடுக்க அவர்களுக்கு மனம் வருமோ! அல்லது பத்மினிக்காக பீமனைத் தான் இழக்க இயலுமோ! இரண்டு கன்றினுக்கு இரங்கும் பசுவைப்போல் பதைத்தனர்



அத்தனை இராஜபுத்திரரும். இவ்விஷயம் பத்மினிக்கும் எட்டியது.

அப் பெண்ணரசி. "அந்தோ! நம் எழில் நல மன்றோ இத்தனை இழவுக்கும் காரண மாயிற்று; இது பற்றியே பேரழகு படைத்த மனைவி பகையாவளென முன்னோர் மொழிந்து போயுளர். விதியையும் மதியால் வெல்லலாம் ஒரு கால் என்பர் பெரியோர். அங்ஙனமே நமது உயிருக்கும் உயர்வுக்கும் பங்கம் வாரா வண்ணம் அம்மை பவானியின் அருளால் முயன்று பார்ப்போம்," என அம்மாதரசி மிக்க துணிவு கொண்டு, தனது மாமன் கோர சிம்மனையும் மருமகன் பத்மலனையும் வரவழைத்து ஆலோசனை செய்தனள்.

அப்பொழுதும், அல்லாவுதீனுடைய சேனைகள் சித்தூரைச் சுற்றி முற்றுகையிட்டு நின்றிருந்தன. ஆதலின், "முற்றுகையை நீக்கிவிட்டு வீரரையும் அப்புறப்படுத்தின், பத்மினியை அனுப்புவோம். ஆனால் அவள் தன் மரபுக்குரிய காவல் பூண்டு அரசிக்கேற்ற ஆடம்பரத்துடனேயே வருவாள். சேடியரும் செவிலித்தாயரும் சூழ்ந்து வருகையில், அவசரப்பட்டு அவளது நாணத்

தையும் கூச்சத்தையும் அவலப்படுத்தல் ஆகாது," என்று இராஜபுத்திரர் அப் பட்டாணிய வரசனுக்கு ஓலை போக்கினர்.

கஞ்சி வரதப்பா என்றால், எங்கு வரதப்பா என்ற ஏழையே போல் அண்ணாந்து நின்ற அல்லாவுதீன் அவ்வோலையின் வாசகங் கண்டு, ஆனந்தக் கடலில் ஆழ்ந்து விட்டான்.

பத்மினியுடன் பாது காவலாகச் செல்ல எழுநூறு மூடு பல்லக்குகள் ஆயத்தமாயின; வீரர் திலகமான ஓரொருவர் ஒவ்வொரு சிவிகையிலும் ஏறிக் கொண்டனர்; அப் பல்லக்குகள் ஒவ்வொன்றையும் தூக்கிச் செல்ல, ஆறு ஆறு சூரர்கள் போகிகள் போல் வேடம் பூண்டார்கள்; ஒவ்வொரு வீரனிடமும் உடை மறைவில் ஈட்டியும் பட்டாக் கத்தியும் பதிவாக இருந்தன.

அவ்விதம் ஆயத்தமான எழு நூறு சிவிகைகளும் பட்டாணியனது பாசறை சேர்ந்தன; சேர்ந்ததும், பீமனும் பத்மினியும் கடைசி முறையாகக் கலந்து பேச அரை நாழிகை நேரம் அவகாசம் கிடைத்தது. அவ்வாறே இருவரும் ஒரு கூடாரத்திற்குள் பேசியிருந்தனர். பின்னர்



பீமனை ஒரு சிவிகையி லேற்றிச் சித்தூர் செல்லச் சிலர் கருத, மற்றப் பல்லக்குகளோ டில்லிக்குச் செல்ல அங்கேயே காத்திருந்தன.

அந்த அரை நாழிகை கழிவதும் அல்லாவுதீனுக்கு ஒரு யுகமாயிருந்தது. இதற்குள் பீமனுக்கேன் விடுதலை யெனவும் அவன் ஆலோசித்தான்; இவ்வளவு நாழிகையா கண்டு பேச என்றும் பொருமினான்; பத்மினியின் வடிவத்தைக் கண்ணெதிரே கணப்பொழுதில் காண்போம் எனவும், வினாடிகளை விரல் விட்டு எண்ணிக் கொண்டிருந்தான்.

அவ்வண்ணம் அல்லாவுதீன் ஆவல் கொண்டு நிற்கையில், சிங்காரைப் போன்ற வீரர் பலர் வாளும் ஈட்டியுந் தாங்கிச் சிவிகையிலிருந்து வெளிக் கிளம்பினர். போகிகள் போல் வேடம் பூண்டு வந்தவர்களோ வேல் கம்புடன் வெளிப்பட்டார்கள்; இன்னுஞ் சிலர் ஈட்டியை நீட்டிக் கொண்டு சிங்கநாதஞ் செய்து புறப்பட்டனர்.

உடனே அரிமாவைக் கண்ட கரிமாவைப் போல் அல்லாவுதீன் அடங்கா நடுக்கங் கொண்டனன். என்றாலும், இராஜ புத்திரரை எதிர்க்கும் வண்ணம் தன்

சேனைக்குக் கட்டளையிட அவன் மறக்க வில்லை. அவ்வாறே பட்டாளியரும் படைக் கலங்களுடன் பாய்ந்தனர்.

இதற்குள் பீமன் கன வேகம் பொருந்திய ஒரு பரி மீதேறிச் சித்தூர்க் கோட்டையை நெருங்கி விட்டான். அவனைத் துரத்தி வந்த பட்டாளியப் படைகளைச் சித்தூர் வீரர் சும்மா விடவில்லை; மறித்துப் போர் புரிந்து அவர்களை வதைத்துத் தாங்களும் மரித்தனர். அப்போரிலே இராஜ புத்திரரில் உயிர் தப்பியவன் பத்மலன் ஒருவனே.

மரபின் மானமும் மன்னவன் மகி மையும் அரசியின் கற்புமே அவர்களுக்கு ஆருயிர்; உடல் கூட்டிலுள்ள உயிர் ஒரு பொருட்டன்று. ஆதலால் மத்தியபதியி லிருந்த வாலிப திலகங்கள் அனைத்தும் அன்று தீர்ந்து போயின என்னலாம்.

ஆயினும் அல்லாவுதீனே அக்கணமே மீண்டும் முற்றுகைபோட முனையவில்லை. ஏனெனில், இராஜபுத்திரரின் சலியா வீரத் தைக் கண்டு அவன் தளர்ந்து போனான்; தன் சேனையின் பெரும்பாகத்தையும் பறி கொடுத்து விட்டான்.



தனது வஞ்சனையும் அவர்களது தந்திரத்தின் முன்னே தலை யெடுக்க முடிய வில்லையே என்று அவன் மனம் வாடினான். எனவே சிறிது காலம் அல்லாவுதீன் தனது ஆசையைக் கட்டிவைத்து, வீரத்தையும் களத்தே போட்டு வெறுங்கையுடன் டில்லி போய்ச் சேர்ந்தனன்.

மூக்கறும் முதலையும் கொண்டது விடா என்பது பழமொழி. அவ்வாறே அல்லாவுதீனுக்கு அம்மங்கையின் மீதிருந்த ஆசை அகலவில்லை. 'சித்தூரைத் தரை யோடு தரையாக ஆக்கிவிட வேண்டும். அவ் வண்ணமாக்கி, அப்பெண்ணரசியை அடைந்தாக வேண்டும்,' என்ற கோபக் கொதிப்பும் ஆசை நோயும் அவனை அடிமை கொண்டு விட்டன.

அதனிமித்தம் தன் நாட்டின் நானு பாகங்களிலிருந்தும் அந்நரபதி கணக்கற்ற படைகளைத் திரட்டினான்; போருக்கு வேண்டிய இதர தளவாடங்களையும் வேண்டு மளவு தேடிவைத்தான்; வைத்த பின்னர், 1290-ம் வருஷம் வந்தான் சித்தூரை முற்றுகையிட.

முதல் முற்றுகையிலும் அழிவிலும் களைத்துப்போய் ஆறித் தேறாதிருந்தும், இராஜபுத்திரர் தமக்கு இயற்கையான போராண்மையைக் கைவிட்டு விடவில்லை. உயிர்போகும் தருணத்திலும் நிமிர்ந்துநின்று உருமக்கூடிய இராஜபுத்திரர், கிடைக்கக் கூடிய படையை எல்லாம் கூட்டி, வழக்கம் போல் சிங்கநாதத்துடன் களம் புகுந்து சமர் செய்தனர். ஆயினு மென்ன?

பட்டாணியனது படை வகுப்பு புற்றீசல் போல் கிளம்பிவர, சித்தூர்ச் சேனையோ நாளுக்கு நாள் நலிந்து கொண்டே வந்தது. எண்ணிறந்த படை வீரரைப் பலிகொடுத்து, நகரின் தென் பாகத்திலுள்ள ஒரு குன்றை அல்லாவுதீன் வசப்படுத்திக் கொண்டான்.

சித்தூர்க் கோட்டையின் உயிர் நிலையான குன்று பகைவன் கையில் சிக்கிவிட்டதால், இரண்டொரு தினத்திலே கோட்டை விழுந்து விடுதல் திண்ணம். புஜபல பராக்கிரம சாலிகளான பல இராஜபுத்திரர் முன்னமேயே போரில் ஆவி துறந்து விட்டனர். எஞ்சியுள்ள வீரர் கொஞ்சமே.

அல்லாவுதீனோ ஆசை வெறியுடன் கோபவெறியும் கொண்டவன். கோட்டை



விழுந்த பின், பத்மினியையே யன்றி மற்ற மங்கையரையும் அவன் பங்கப்படுத்துவான். ஒரு பெண்ணின் மானத்துக்காக எல்லாப் பெண்களையும் சந்தியில் விட்டுப்போக இராஜபுத்திரருக்கு இஷ்டமில்லை.

தனது வாலிலுள்ள மயிர்க்கற்றையிலே ஒரு மயிரை யிழப்பினும் கவரிமான் உடனே உயிர் விடுமென்பர். அம்மானினும் மானத்தைப் பெரிதாக மதித்துப் பிராணனைத் திரணமாகக் கருதும் இராஜபுத்திரர் அக் கோரத்துக்கு ஒருகாலும் இடங்கொடார்.

போரிலே தமக்கு வெற்றி கிடைக்காதெனத் தோன்றின், இராஜபுத்திரர் முதலிலே தம் மனைவியரையும் குமரிகளையும் தீக்கிரையாக்கி விடுவர்; பின்னர் மஞ்சள் உடை தரித்து, நெற்றியில் குங்குமத் திலகமிட்டு, கோட்டைக் கதவுகளைத் திறந்து போட்டு, வாளுடன் பகைவரின் மத்தியிலே பாய்வர்.

அதன்படி சித்தூரிலுள்ள ஆண்மக்கள் அனைவரும் தங்கள் குடும்பத்தைச் சேர்ந்த மங்கையர் அனைவரையும் தீக்குளிக்குத் தயாராகும் வண்ணம் தெரிவித்தனர்.

அவ்விதமே ஒவ்வொரு பெண்ணும் நறுநீராடி, அழகிய ஆடை தரித்து, அணி

கலன் அனைத்தும் பூண்டு, அம்மை பவானியைத் துதித்து வணங்கி, வசந்த கால விழாவினுக்குச் செல்லும் மகிழ் பூத்த மாதே போல் புறப்பட்டாள். அக் கோட்டையின் ஒரு புறத்தே நிலவறை யொன்றுண்டு. அதில் தான் மாதரைத் திரட்டித் தீயிடுவது வழக்கம்.

தாமரை மலர் தனில் அன்னப் பறவை ஆர்வமுடன் அமர்வது போலவும், முன்னாளிலே சீதாதேவி சந்தனக் குழியெனக் கருதித் தீயில் இறங்கியது போலவும், இராஜ புத்திர மங்கையர் அகமும் முகமும் ஒருங்கே மலர்ந்து, ஒருவர் பின் ஒருவராக அம்மையின் ஆயிர நாமங்களையும் நவின்று கொண்டு, நிலவறையிலுள்ள அக்கினி குண்டத்தில் குளித்தனர். இக் கோலத்திற்கு ஒரு விதத்தில் காரணமான பத்மினியும் பரமகளிப்புடன் கொழுந்து விட்டெரியும் தீயில் குளித்தனளென நாம் சொல்லத் தேவையில்லை.

அங்ஙனம் ஆயிரக்கணக்கான கன்னியர் களிப்புடன் செல்லும் கோலத்தை அவர்கள் தந்தை, தநயன், புருஷன் முதலியோர் கண்டு நின்று பரமனைத் துதித்தனர். அரசி முதல் வாயில் கூட்டும் பெண் வரையில் பெண்ணெனப் பெயர் படைத்த அனைவரையும்



அக்கினி பகவானுக்கு அளித்த பின்னர், ராணா இலக்குவனும் எஞ்சி நின்ற வீரரும் போர்க்கோலங் கொண்டு கிளம்பினர் கவலையின்றி.

உடனே பட்டாணியச் சேனைகளும் கைகலக்கக் குறுகின. அந் நாள் பாரதப் போரிலே அபிமன்னன் கௌரவ சேனையின் நடுவே சென்று, அனைவரையும் கலக்கியது போல், மகாராணா இலக்குவனும் அல்லாவுதீனுடைய சேனையைக் கலக்கினான். இதர வீரரும் அப்படையினூடே பாய்ந்து மத்திட்டுத் தயிர் கடைவதுபோல், பட்டாணியரைப் பதறவடித்தனர்.

ஒரு சமயம் அல்லாவுதீனே, போர் யாதாக முடியுமோ என்று கலங்கினான். எனினும் ஓர் ஆறு கருங்கடலை நிலை குலையச் செய்ய இயலுமோ? இயலாது. ராணாவும் இராஜபுத்திரரும் வீரங்காட்டி உயிர் விட்டனர் விதிவலியால்.

பன்னிரண்டு வருஷகாலம் கடும்போர் நடந்த பின்பு, சித்தூர்க் கோட்டை சிதறி வீழ்ந்தது. உடனே அல்லாவுதீன் அடங்கா மகிழ்ச்சியும் ஆவலுங் கொண்டு சித்தூருக்குள் புகுந்தான். புகுந்து மென்ன? உயி

ற்ற உடலைக் காண்பதுபோல் நீறு பூத்த நகரையே அவன் கண்டனன்.

இவ்வளவு தூரம் உயிரைப் பறி கொடுத்தும், இராஜபுத்திர வீரரைப் பலி வாங்கியும், தன் ஆசைக்கு இருப்பிடமான பத்மினியைக் காணாது அக்காவலன் கலங்கினான் என்பதில் ஐயமில்லை. ராணாவின் அந்தப்புரம் வெற்றுப்புரமாக விளங்கிற்று.

அதற்கு அருகே ஆகாய மளாவப் புகைப் படலம் கிளம்புவதைக் கண்டு, "ஓ! எல்லோரும் தீக்குளித்தனர் போலும். மலை கல்லி எலிகூடப் பிடிக்கவில்லையே" யென்று பொருமினான் அப்பட்டாணியன். அந் நகரின் வனப்பையும் அலங்காரத்தையும் நோக்கவே, அவனது கோபக்கனல் கொழுந்து விட்டெரியத் தலைப்பட்டது.

அச்சினவெறி தலை மட்டங் கொண்டு விடவே, புராதனமான அழகிய ஆலயங்களை யெல்லாம் அவன் இடித்துத் தள்ளினான்; அரண்மனைகளை அடியோடு பாழாக்கினான்; விசித்திர வேலைப்பா டமைந்த மண்டபங் களை மண்ணோடு மண்ணாக்கினான்; சுருங்கச் சொன்னால், குரங்கு தன் கையிலகப்பட்ட நறு



மலர் மாலையை நாசஞ் செய்வதுபோல் அந் நகரை அவன் பாழ் பண்ணினான்.

பீமனும் பத்மினியும் வசித்து வந்த மாளிகை மட்டுமே அவனது கோபவெறிக்கு இலக்காகாது எஞ்சி நின்றது. அதற்கு யாது காரணமோ கடவுள்தான் அறியவேண்டும். அப்பால் அக் கொடியோன் தன் சிற்றரசரில் ஒருவனை மாலதேவன் என்பானிடம் அந் நகரை ஒப்படைத்து வாடிய முகத்துடன் டில்லிக்குத் திரும்பினான்.

# 2. இராணி ஸம்யுக்தை

பத்தாம் நூற்றாண்டிலே ஆரியாவர்த்தத்தில் பிரசித்தி பெற்றிருந்த இராஜ்யங்கள் நான்கு ஆகும். அவை டில்லி, கன்னோசி, அனகல பட்டினம், மத்தியபதி என்பன. அவற்றை ஆண்டு வந்த அரசர் அனைவரும் இராஜபுத்திர மரபினர்.

பன்னிரண்டாம் நூற்றாண்டின் கடைசியில் சீர் மிகப் பெற்றிருந்தது கன்னோசி நாடே. அதற்குக் குசுமபுரம் எனவும் ஒரு பெயர் உண்டு. அந்நாட்டின் தலை நகர் கன்னோசி.

அன்று அந்நகரின் சுற்றளவு முப்பது மைல்; எங்குப் பார்த்தாலும் அழகிய மாட கூடங்களும், மண்டபங்களும் அங்கு நிரம்பியிருந்தன.

அவ் வேந்தனது சேனைப் பெருக்கு வியக்கத் தக்கது. இரும்புக் கவசம் பூண்ட வீரர் எண்பதாயிரவர்; பரிவீரர் முப்பதாயிரம்



பேர்; காலாள் படையினர் மூன்று லட்சம்; வில்லாளர் இரண்டு லட்சம். யானைப் படையோ ஐம்பதாயிரம்.

பன்னிரண்டாம் நூற்றாண்டின் இறுதியிலே ஷாபுதீன் அல்லது முகம்மது கோரி என்பான் கொள்ளை யடிப்பதில் ஆவல் கொண்டு, நம் பாரத பூமியில் புக முயன்றான். முகம்மதின் சேனையிலே பெரு வீரரான ஐரோப்பியரும் சேவித்திருந்தனர்.

அன்னியனது படையெழுச்சி கேட்டதும், கன்னோசியின் காவலனான ஜயசந்திரன் என்பான் தனது பெருஞ்சேனையுடன் சென்று, நீலநதிக்கரையில் பகைவனைச் சந்தித்துப் போர் புரிந்து பெருமிதமான வெற்றி மாலை சூடினான்.

முகம்மதின் சேனை வெட்டுண்டதனால் பெருகிய இரத்த வெள்ளம் நீல நதியை இரத்த நதியாகச் செய்து விட்டது என்னலாம். ஜய சந்திரனது பெரு வெற்றி கண்டு, ஏனைய அரசர் பலரும் அவனைப் போற்றிப் புகழலாயினர்.

ஈதிங்ஙன மிருக்க, டில்லியிலே அரியணையில் அமர்ந்திருந்தவன் பெயர் பிருதிவிராஜன். அவன் மகா வீரன்; பேரறிவாளி

யும் ஆவான். பிருதிவியின் காலத்திலே டில்லியரசு தலை தூக்கி, மற்றைய மூன்றினும் மேம்படத் தொடங்கிற்று. அதற்குக் காரணங்கள் இரண்டாகும். பொன் மாது அப் பிருதிவியைக் கடைக்கணிக்கத் தொடங்கினள்.

உடனே நாகூர் என்னு மிடத்தில் ஏழு கோடி தங்க நாணயங்கள் அவனுக்குப் புதையல் கிடைத்தன. அது கொண்டு பிருதிவி தனது நாட்டைப் பல வகையிலும் வளம்படுத்தினன்; சேனையையும் பெருக்கி வலுப்படுத்தினன்.

கன்னோசியும் அனகல பட்டினமும் டில்லியின் வளர்ச்சி கண்டு, அழுக்காறு கொள்ளத் தலைப்பட்டன. அழுக்காறு என்பது ஒரு பாவி. அது தோன்றிவிடின், திருவைத் தொலைத்து நரகில் உய்க்கும் என்பதைப் பலரும் உணர்வதில்லை.

பிருதிவியும் ஜய சந்திரனும் தாயாதிகள் ஆதலின், அப்புதையலில் தனக்குப் பங்கு வேண்டு மென விரும்பினன் ஜய சந்திரன். பிருதிவி அதற்கு மன மொப்ப வில்லை. ஆதலின் ஜய சந்திரனது அழுக்காறு கொழுந்து விடத் தலைப்பட்டது.



இந்நிலையில் சந்திரன் தனது உயர்வை உலகினுக்கு உணர்த்தக் கருதி அசுவமேத யாகம் புரியத் தொடங்கினன். அதற்கு அரசர் அனைவரும் விஜயஞ் செய்து காணிக்கை செலுத்தி உதவி புரிந்தனர்.

பிருதிவியோ அதற்குச் செல்லவில்லை. செல்லின், ஜய சந்திரனுக்கு உட்பட்ட சிற்றரசைப் போல் நடக்க வேண்டு மென்று பிருதிவிக்குத் தெரியும். பிருதிவி வரவில்லை யென்று அறிந்ததும், ஜய சந்திரனுக்குக் கோபம் கரை கடந்து விட்டது.

யாக முடிவில் தனது அருமை மகளான சம்யுக்தைக்குச் சுயம்வரமும் குறிப்பிட்டிருந்தான் ஜய சந்திரன். அவள் அழகினுக்கு ஓர் இருப்பிடம்; அறிவினுக்கு ஓர் ஆலயம்; அடக்கத்திற்கு ஓர் நிலயம். இளமை முதல் வீரரின் சரிதங்களை உணர்தலே அவளது பொழுது போக்காம்.

புராண இதிகாச வீரரைப் போல் பிருதிவி ராஜன் விளங்குவதைக் கேட்டதும், அவன் மீது ஸம்யுக்தைக்கு ஆசை உதிக்கலாயிற்று. பிருதிவியும் அவளது குண நலத்தையும் மதி நலத்தையும் கேள்வியுற்று, ஸம்யுக்தையின் மீது ஆசை கொண்டனன்,

ஆயினும் பகைவனது மகளை மனைவியாக அடைதல் எங்ஙனம்? வேள்விக்குச் செல்ல விருப்ப மில்லாதவன், சுயம்வரத்திற்கு மட்டும் செல்லின், ஏச்சுக்கு இடமாகும் அல்லவா? சுயம்வர தினத்தன்று இராஜ குமாரர் அனைவரும் செயற்கை யழகைச் செவ்வனே செய்து கொண்டு, மண மண்டபத்தே வீற்றிருந்தனர்.

சம்யுக்தையின் மாலை பெறுதல் சொர்க்கப் பதவிக்கு நிகரென நினைத்திராத அரசகுமாரர் இல்லை. குறிப்பிட்ட நேரத்தில் தாதியர் அம் மங்கைநல்லாளைக் கைலாகு கொடுத்து அழைத்து வந்து, மண்டபத்தில் மாண்பாக வீற்றிருக்கும் மன்னர்களின் பெயரையும் பெருமையையும் எடுத்தோதினர். பிருதிவியின்மீது பிரியம் வைத்திருப்பவள் பிறரை மனத்தாலும் மதிப்பளோ?

வேள்விக்கு வாராத காரணத்தால் வெகுளி மிகக் கொண்ட ஜய சந்திரனே பிருதிவியைப் போல் பதுமை யொன்று செய்து, அதற்கு விகாரமான வர்ணம் பூசி, மண்டபத்தின் வாயிலிலே பணியாளனைப் போல் நிறுத்தி வைத்திருந்தனன். அவையிலுள்ள அரசர் அனைவரையும் பார்த்து



விட்டு ஒருவருக்கும் மாலை யிடாமல், வாயிலை நோக்கிச் சென்றனள் சம்யுக்தை.

இளவரசர் பலரும் அதுகண்டு, "நம்மில் ஒருவருக்கும் இவள் மாலையிட வில்லை; வாயிலை நோக்கிச் செல்லுகின்றனள்; கன்னிகையாகவே காலங் கழிக்கப் போகின்றனளோ? நம்மினும் சிறந்த நாயகன் இவளுக்குக் கிட்டுவான் போலும்!" என்று எண்ண மிட்டுக் கொண்டிருந்தனர்.

அச்சமயம் சம்யுக்தை தன் கைதனிலிருந்த மண மாலையை அப் பதுமையினுக்குச் சூட்டி மன மகிழ்ந்தாள். இளவரசர் அனைவரும் வெட்கி மனஞ் சுளித்தனர்.

ஜய சந்திரனே அது நோக்கி, ஆற்றொணுக் கோபங் கொண்டு, ஏக புத்திரி என்றும் எண்ணிப் பாராமல், அவளைச் சிறை செய்தனன். பிருதிவியைத் தொலைக்கக் கங்கணம் கட்டிக் கொண்டிருப்போன் தன் மகள் அப் பிருதிவியின் பிரதிமைக்கு மாலையிட மனஞ் சகிப்பனே?

கன்னோசி சம்பவம் அனைத்தும் டில்லிக்கு எட்டியது. உடனே பிருதிவி சம்யுக்தையின்மீது களிப்பும், ஜய சந்திரன் மீது கடுப்புங் கொண்டு, படையுடன் கிளம்

பினன் தன் மகிஷியை மீட்கக் கருதி. கன்னோசியின் சேனையும் திரண்டெழுந்தது. ஓர் ஐந்து நாள் காறும் கடும் போர் நடக்க, முடிவில் ஜய சந்திரன் முதுகு காட்டியோடினான்.

உடனே பிருதிவி தனது ஆருயிர்த் தேவியைச் சிறை மீட்டுத் தனது உள்ளமாம் சிறையில் அவளைச் சேமித்து வைத்தான். ஜய சந்திரனுக்கோ துக்கம் ஒரு பக்கம், வெட்கம் ஒரு பக்கம் வாட்ட, வகை காணாது கிடந்தனன் உன்மத்தங் கொண்டு.

கன்னோசியும் டில்லியும் கடும் பகை கொண்டு கிடப்பதைக் கேள்வியுற்றதும், முகம்மது கோரி முன் பட்ட தோல்வியின் பயம் விண்டு, துணிவு கொண்டு பாரத பூமியில் புகுந்து கொள்ளையும் கொலையும் கண்டு கொக்கரித்தான்; ஆலயங்களை இடித்துத் தள்ளி அட்டகாசஞ் செய்தான்; வனப்பு மிகுந்த வனிதையரைத் தேடிப் பிடித்து, வீரருக்கு வழங்கி மான பங்கஞ் செய்தான்.

அது கேட்ட பிருதிவிராஜன் வட இந்தியா எங்குமுள்ள வீரருக்கும் வேந்தருக்கும் ஓலை போக்கி வரவழைத்துக் கடல்



போல் திரண்ட சேனையுடன் முகம்மது கோரியை எதிர்க்கலாயினன். இராணி சம்யுக்தையோ ஆடவனைப் போல் வேடம் பூண்டு, அழகிய பாய்மாவின் மீதேறி, அன்பனுடன் இரணகளஞ் சென்று அரும்போர் விளைத்தனள்.

அப்புதிய வீரனை யாரும் இன்னாரென உணர முடியவில்லை. தென்றிசைத் தலைவனே மானிட வடிவு தாங்கி உயிர்களைப் பருகுகின்றனனோ என்னும் வண்ணம், எண்ணிறந்த முகம்மதிய வீரரை அவ்வீர மாது வெட்டிச் சாய்த்தாள்.

மூன்று பகல் ஓயாமல் ஒழியாமல் கோர யுத்தம் நடைபெற்றது. நாலாம் நாள் பொழுது புலரவே, சூரியனைக் கண்டு இருள் ஓடுவது போல் எஞ்சியிருந்த முகம்மதிய சேனை ஓட்டம் பிடிக்கலாயிற்று. முகம்மது கோரியும் உயிர் தப்பினால் போதுமென வந்த வழியின் மேல் விழிவைத்து அல்லாவைத் துதித்துக் கொண்டே விரைந்து சென்றனன்.

அப்போரில் ஜய சந்திரன் பிருதிவியின் பக்கமும் சேரவில்லை; கோரிக்கும் துணை போகவில்லை. கோரியின் கையில்

சிக்கி, பிருதிவி ஆவி இழவானு என்று அவன் ஆவலுடன் எதிர்பார்த்திருந்தான். ஆனால் கோரியோ முதுகு காட்டி ஓட, பிருதிவி பெருமித வெற்றி பெற, ஜய சந்திரன் எங்ஙனம் சகிப்பான்?

வஞ்சம் விளைத்துப் பிருதிவியின் வாழ்வைப் பறிக்க வேண்டுமென ஜய சந்திரன் விரும்பி, வட இந்தியச் சிற்றரசுகள் பலரையும் பிருதிவியினின்றும் வேறு படுத்தினன். தேசத்தின் சாபத்தீட்டினால் சிற்றரசரில் பலரும் ஜய சந்திரனது மாய வலையில் பட்டுக் கிடக்கலாயினர்.

அப்பால் சந்திரன் ஓர் ஆள் அனுப்பி, மீண்டும் படை கொண்டு வரும் வண்ணம் கோரியை வேண்டினன். பழிவாங்க வேண்டுமென்று காலம் பார்த்திருந்த கோரிக்கு அத்தூது கண்டு உள்ளம் பூரிக்கலாயிற்று. உடனே அம்முகம்மது கோரி ஒரு பெரும் படையுடன் வந்தனன் பாரத பூமியின் மீது.

பிருதிவியோ துணை பலமின்றி யிருந்தும், இயற்கை வீரத்துடன் ஆண் சிங்கத்தைப் போல் கிளம்பத் தலைப்பட்டான்.



கிளம்பு முன்னம் ஆருயிர்த் தேவியுடன் உரையாடி நின்றதை உணர்த்தல் வேண்டும்.

“நங்காய்! நேற்று இரவு கனவொன்று கண்டேன். அதனை உன்னிடம் உரையாது யாரிடம் உரைப்பேன்? அரம்பையைப் போல் அழகு வாய்ந்த மாதொருத்தி வந்து என் கையைப் பிடித்தனள். பின்னர் அவள் உன்னையும் பற்றிக்கொண்டாள்.

“நீ அப் பிடிப்பை விடுத்துக் கிளம்ப முயலுகையில், குஞ்சரமொன்று வெகுண்டு வந்து என்னைப் புரட்டி மிதித்தது. உடனே கண் விழித்தேன். அரம்பையையும் காணவில்லை; யானையையும் காணவில்லை. ஹரி, ஹரி என்று சொல்லி எழுந்தேன். ஆண்டவன் என்ன எண்ணியிருக்கிறுனே அறியேன்.”

சம்யுக்தை, “நாதா! தங்களுக்கு வெற்றியும் கீர்த்தியும் கிட்டப் போகின்றன. பிறப்பதும் இறப்பதும் மானிடருக்கு மட்டும் அன்று, தேவருக்கும் உண்டு. பழைய ஆடையைக் கழற்றி எறிய ஆரே ஆசை கொள்ளாதார்? சாக நேரின் வீரமுடன் சாதல் விழுமியதேயாம். என்னையோ, தங்கள்

ஆருயிரையோ எண்ணிக் கவலை கொள்ள வேண்டாம்.

"தேசத்தை, தேசத்தின் சுதந் தரத்தை, நம் மரபின் கீர்த்தியை, நங்குலத்தின் வீரத்தை, எண்ணியிருங்கள். வாள் கொண்டு பகையைப் பிளந்தெறியலாம். இந்த வுலகில் அர்த்தாங்கியாய் இருந்தது போலவே, மேல் உலகிலும் யான் தங்களது அர்த்தாங்கி ஆவேன். இது திண்ணம்" என்று கூறினள்.

கனவின் விளைவு இன்னதெனப் பிருதிவி அறியாதவன் அல்லன். ஆயினும் அன்புடைய மனைவியின் உள்ளத்தைச் சோதிக்கவே அவன் உரைத்துப் பார்த்தான்; உடனே படைத்தலைவரையும், துணைவரையும் வரவழைத்து விரைவில் போருக்கு ஆயத்த மாகி, யமுனை நதிக்கரை வந்து தங்கினன்.

சம்யுக்தையும் சலியாமல் பெருவீரனைப் போல் வடிவம் புனைந்து, படைத்தலைமை பூண்டனள். போர் முறுக்கும் வகையைக் குறித்து அவளது ஆலோசனையைக் கேட்கை யில், சம்யுக்தை சொல்வாள் :—

"அரசே! அன்னை தயையும், அடியாள் பணியும், மலர்ப்பொன்னின் அழகும் புவிப்



பொறையும், விறல் மந்திரி மதியும், உடையாளே பெண் எனப்படுவாள். எண்ணறப் படித்து எழுத்தற வாசித்தாலும் பெண் புத்தி பெரும் பேதமைத்து என்பதெல்லாம் பொய்யே யாம்.

"பெண் மக்கள் இன்றேல் உலகமே இல்லை. பெண்கள் அன்னை பராசக்தியின் வடிவம். இன்பம் துன்பம் இரண்டிலும் ஆடவரைப் போல் சரிசமமான பங்கு அவர்களுக்கு உண்டு. கணவன் உயிர் துறப் பின், உடனே அவனுடன் ஆவி விடுவர் உத்தம அரிவையர். இகத்தில் பதியுடன் கூடி வாழ்ந்தது போலவே, பரத்திலும் வாழ விரும்புவளே பெண்ணவள்.

பெண்கள் தடாகத்துக்குச் சமானம். புருஷரோ அதில் திளைத்து ஆனந்தங் கொள் ளும் அன்னத்துக்கு நிகராவர். ஆதலின் அரசே! எனக்கு இம்மியும் அச்சமில்லை. முன்னம் முதுகு கொடுத்து ஓடிய முகம்மதே மீண்டும் வந்துளான். ஒன்று, அவனை இப் பொழுதும் புறங்காண்போம். இன்றேல், வீரமே விளைத்து வீரசுவர்க்கம் புகுவோம். இதனாலாகும் பழியும் பாவமும் கன்னோசி நாட் டரசன் சுமந்து திரியட்டும்; நம்மிருவரின்

உயிர் உள்ளவரை அன்னியருக்கு இப்பூமியில் இடந்தரல் ஆகாது. கடையாமம் வந்துவிட்டது. கோழி கூவுகின்றது. ஆண்டவனைத் துதிப்போமாக!"

மறுதினம் காலையிலே சுந்தர வாலிப வீரனொருவன் ஜயசந்திரனது பாசறை குறுகி, "பிருதிவியிடமிருந்து வந்த தூதுவன் யான். உம் அரசனைக் கண்டு உரையாட வேண்டும்" என்று கூறினன். காவலர் அக்குமரனை அழைத்துச் சென்று, அரசன் சமுகம் சேர்த்தனர்.

மறைமொழி பேசவிரும்புவதால், யாரும் இருத்தலாகாதென வீரன் விளம்ப, ஜயசந்திரன் அதற்கு இசைந்தனன். பின்னர் இளங்குமரன் இசைப்பான்:—

"அரசே! தாங்கள் அரியணை ஏறியமர்ந்து ஆண்டுகள் பல ஆகிவிட்டன. விருத்தாப்பிய தசையும் நெருங்கிவிட்டது. அந்திய காலத்தில் தாங்கள் இயற்றியுள்ள கருமத்தை எண்ணிப் பாருங்கள். நம் சமயத்துக்கும் தேசத்துக்கும் பகைவனான முகம்மது கோரியைப் படையுடன் வரவழைத்திருப்பதின் கருத்து யாது?



தாயாதியான பிருதிவியைத் தொலைத்துவிடவேண்டும் என்பதன்றே? பிருதிவியைப் போல் எத்தனையோ பிருதிவியை பாரதமாதா ஈன்றெடுத்திருக்கிறாள்; இனியும் ஈன்றெடுப்பாள். ஆகவே பிருதிவி போவதைப்பற்றி நான் கவலைகொள்ளவில்லை. முகம்மது வெற்றி கொள்ளின், நம் நந் நாடு என்னாகும்? நம் சோதரர் என்னாவர்? முன்னம் அக்கொடியோன் வந்து, ஆடவரைக் கொலை புரிந்து, பெண்டிரைச் சிறை செய்து, ஆலயங்களை இடித்துத் தள்ளி, நகரங்களைப் பாழாக்கி நாசம் விளைத்ததை மறந்தீர்களோ?

மீண்டும் நம் நாடு, தாய் நாடு, பாரதத் திருநாடு பகைவன் கையில் சிக்கிப் படாத பாடு படவேண்டுமோ? முன்னம் முகம்மது கஜினி வந்து கொள்ளை கொண்டுபோன பணக் குவியலுக்குக் கணக்குண்டோ?, முகம்மது கோரியும் கொள்ளை கொள்ளின், நாட்டின் வளம் நிர்மூலம் ஆகும் அன்றோ? அந்நியர் வந்து செல்வமனைத்தையும் சூறையாடின், நாட்டு மக்கள் பசிப்பிணியால் நலிய வேண்டும் அன்றோ? இன்று பிருதிவியை அழிக்கத் தேடிய கொள்ளியே நாளை தங்களையும் தங்கள் மரபையும் வேரறுக்கும் என்பது தேற்றம். இதனைத்

தாங்கள் எண்ணிப் பாராமல் இருந்தது நம் தேசத்தின் விதிப்பயன் போலும்!"

அசூயை வெறிகொண்டு கிடக்கும் சந்திரனுக்கோ எரியும் அனலில் எண்ணெய் ஊற்றுவதுபோல் அவ்வசனம் காணப் பட்டதேயன்றி வேறன்று. ஆயினும் அக் குமாரனது குரலோ பழகிய குரலாகக் காணப் படுகையில், ஜயசந்திரன் கூர்ந்து நோக்க லாயினன்.

உடனே குமரன் தனது ஆண் உருவைக் களைந்து சுயவடிவுடன் நிற்க, ஜய சந்திரனுக்கோ சிறிது நேரம் ஒன்றும் தோன்றவில்லை. பின்னர், "பெண்ணே! நீயோ எனக்குப் புத்தி புகட்ட வந்தனை? அப்பாவி பிருதிவியை மாய்க்க யான் விரும்பி நிற்கும் சமயம் நீயோ அவனுக்கு மாலை யிட்டனை. இது கண்டு யான் எங்ஙனம் பொறுப்பேன்! எல்லாவற்றிற்கும் ஆதி காரணம் நீயே. என் முன் நில்லாதே. விரைந்து செல்" என்றனன்.

சம்யுக்தை, "எந்தாய்! கேடு வருங் காலையில் தங்களுக்கு மதி கெட்டது பற்றி மனம் வருந்துகின்றேன். யானோ என் தாய் பூமியையும் நாயகனையும் காக்க உயிரை



யும் விடத் துணிந்துள்ளேன். எந்தையாகிய தங்களின் ஆசிபெறவே வந்தேன்.

"மீண்டும் வேண்டிக் கொள்வேன். பாரத தேசத்தின் பெருமையை நோக்குங்கள். ஏழை எளியவரின் கதியை எண்ணுங்கள். ஆலயங்களையும் ஆண்டவனையும் கருத்தில் இருத்திப் பாருங்கள், வேண்டாம். காலம் போம், பழியும் பாவச் செயலும் அழியா மல் நிற்கும்," என்று இரந்து சொல்லினள்.

"பெண்ணே! பூசலோ விளைந்து விட்டது; இரு பக்கத்துப் படைகளும் அணி வகுத்து நிற்கின்றன. இனி என்னால் ஆவது ஒன்று மில்லை," என்றனன் ஜய சந்திரன்.

சம்யுக்தை, "ஐய! நீயோ ஓர் ஆண் மகன்? இராஜபுத்திர வமிசத்தில் கோடரிக் காம்பாய்ப் பிறந்தனையே! உன்றன் மரபும் குலமும், உலகம் உள்ளவரை ஊறு பட்டுக் கிடக்கும். அன்னியருடன் சேர்ந்து, நாட் டைக் காட்டிக் கொடுக்கும் உன்னை என் தந்தையென அழையேன்," என்று சினந்து கூறித் திரும்பினள்.

அப்பால் பிருதிவி ராஜன் தனது ஒற்றர் களின் மூலம் பகைப் படையின் பலத்தை

புணர்ந்து, கனவின் பலனையும் உன்னி, வீர சுவர்க்கமே தனக்குக் கிட்டுமெனத் தீர்மானித்தனன்.

“பெண் பாவாய்! இப்போரிலே வெற்றிமாலை சூடுதல் என்பது ஆகாத காரியம். யமுனை நதியைத் தாண்டி வாரா வண்ணம் பகைவனைத் தடுக்கப் பார்க்கின்றேன். ஒரு சமயம் அதற்குள் யான் பொன்னுலகம் போய்விடின், ஜயசந்திரனும் முகம்மதும் டில்லிக்குச் செல்வர். ஆங்கே நம் குல மங்கையர் பலரும் ஒருங்கு திரண்டுளர். அன்னோருக்கு ஆறுதல் சொல்லி, அக்கினிக் கடவுளைச் சரணமடைய ஏற்பாடு செய்வாயாக,” என்றனன் அவ்வேந்தன். சம்யுக்தையும் சரியென்று சம்மதித்து விடைபெற்றேகினள்.

கதிரவன் கிளம்பியதும், இரு படைகளும் கை கலக்கத் தொடங்கின. தொகையில் பெருத்த முகம்மதியர் சேனை பகல் வரையில் பிருதிவியின் கையில் சிக்கி வேசாறியது. முடிவில் அச்சேனை மூர்க்கங் கொண்டு கிளம்பவே, இராஜபுத்திரரும் ஆவேசத்துடன் பாய்ந்தனர்.



எங்குப் பார்த்தாலும் கரங்கள் அறுவதும், சிரங்கள் துணிபடுவதும், கவந்தங்கள் கூத்தாடுவதுமாய் இருந்தது. தாய் நாட்டை அன்னியன் கைப்பற்றுவதா எனக் கறுவி நின்ற இராஜபுத்திரர் ஒவ்வொருவரும் பகைவரில் பலரை இரை கொண்ட பின், ஆவி துறந்தனர்.

பிருதிவியோ பகைப்படையின் நடுவே புகுந்து, சண்டமாருதம் போல் இங்கும் அங்கும் திரிந்து, ஒன்னலரின் உயிரைக் கவர்ந்து உருமினன். பகைவனது வாள் வீச்சு வந்து மார்பில் பாயப்போகும் சமயம், அருகிலிருந்த மெய்காவலன் தோன்றி அவ்வாளை இரு துண்டாக்கினன்.

மற்றொரு சமயம் யானை வீரனொருவன் தனது மிருகத்தை ஏவி, பிருதிவியைக் குறிகொள்ள, அம் மெய்காவலனது வேல் கம்பினால் பாகன் பட்டு வீழ்ந்தான், யானையும் துதிக்கையற்று பிளிறிக்கொண்டோடியது.

அது கண்ட பிருதிவி மனங்களித்து அம் மெய்காவலனை வாயார வாழ்த்திப் புகழ்ந்தனன். பின்னர் இருவருமாகப் பகைப் படையின் தலைவனை நோக்கிச் செல்லு

கையில், பிருதிவியின் வாள் அத்தலைவனது சிரத்தை நிலத்தில் வீழ்த்தி மிளிரலாயிற்று.

அதே சமயத்தில் அத்தலைவனது வாள் வீச்சினால் மெய்காவலனது வலக்கரம் அற்று விழ, அவன் உடனே இடதுகையில் உடைவாளை ஏந்தி வீசினான் இருபக்கமும்.

அவ்வீச்சின் வேகத்தில் கையும் காலும் அற்று வீழ்ந்த முகம்மதியர் எண்ணிலர். பின்னர் சிறிது நேரத்திற்கெல்லாம் மெய்காவலனது இடக்கரமும் துண்டுபட்டது. அப்போதும் அவன் மனந் தளரவில்லை.

ஆயினும் வேலொன்று வந்து மார்பில் தாக்கியதும், அம்மெய்காவலன், “அரசே! உன்றன் ஆருயிர்க் காதலி கதியின்றிக் கீழே விழுகின்றாள். மேலுலகில் இருந்து தங்கள் வரவை எதிர்நோக்கி யிருப்பாள்,” என்று கூறி வாய் மூடினான்.

அது கேட்டு சம்யுக்தையே மெய் காப்பாளனாய் மொய்யமர் புரிந்ததாகப் பிருதிவி கண்டு, கண்ணீர் வடித்து, “என் கண்ணே! உன்னை டில்லிக்கு அல்லவோ அனுப்பினேன்?” என்று சொல்லி, அவளது உடலை வாரியெடுத்து மடிமீதிருத்திக் கொண்டான்.



பல சொல்லிப் பயனென்ன? கணப்பொழுதில் பிருதிவியும் தன் நாயகியுடன் நல்லுலகம் சேர்ந்து, அமரர்க்கு விருந்தாயினன்.

முகம்மது கோரியோ வெற்றிக் களிப்பில் மூழ்கி, வழியிலுள்ள நகரங்களைத் தீக்கிரை யாக்கி, டில்லி நகர் சேர்ந்தான். சேரவே ஆகாயம் வரையில் கொழுந்துவிட்டெரியும் அனல் புகையே அவனை வரவேற்றது. அந்நகரில் பெண்ணென நாமம் படைத்த எவரையும் அவன் காணவில்லை.

அப்போதுதான் ஜயசந்திரனுக்குச் சுய அறிவு தலைப்பட்டது. என் நினைந்து என் செய்தோமென அவன் மாழ்கினன். மாழ்கிப் பயனென்ன? முடிவில் முகம்மது கோரி அந்த ஜயசந்திரனையும் போரில் வென்று டில்லியிலே அரியணையில் அமர்ந்து ஆனந்தங் கொண்டான். சாபத்தீட்டினால், நம் நாட்டரசுரிமை அன்னியரின் கையில் சிக்கிக்கிடக்கத் தலைப்பட்டது.

# 3. தாரா பாய்

பண்டைக் காலத்திலே நம் தேசத்தில் வீர மங்கையராகப் பலர் வாழ்ந்து வந்தனர். இவ்வுண்மை ஆதிகால சரித்திரத்தை ஆராய்வோருக்கு நன்கு புலனாகும். தமிழ் மக்களிலே மாதரும் வீர மங்கையராக விளங்கி வந்ததைப் புறநானூறு போன்ற பழைய சங்க நூல்களில் பரக்கக் காணலாம்.

இராஜ புத்திரரிலோ எண்ணிறந்த வீர மங்கையர் தீரங் காட்டி வாகை சூடியுளர். அத்தகைய ஒரு வீர மாதின் சரித்திரத்தை இங்கே சுருக்கிக் கூறுவோம். முதலில் இராஜ புத்திரர் என்றால் யாவர் என இரண்டொரு வார்த்தை இசைக்க வேண்டும்.

பொதுவாகச் சொல்லின், இராஜ பரம்பரையைச் சேர்ந்தோர் இராஜபுத்திரர் எனப்படுவர். அவர்கள் ஆதிகால சூரிய, சந்திர, அக்கினி குலத்தைச் சேர்ந்தவர்கள். அவர்களின் உறைவிடம் இராஜஸ்தானம் எனப்



படும். இக் காலத்தே அந்த இராஜஸ்தானம் ஆங்கிலத்தில் இராஜபுதனம் என வழங்கி வருகின்றது.

அது நமது பாரத தேசத்தின் வட பாகத்திலுள்ளது. அவர்களே முன்னம் நமது தேசத்தின் வட பாகத்தில் முடி வேந்தர்களாகவும் வெற்றி வீரர்களாகவும் விளங்கியவர்கள்; இப்பாரத நாட்டிலே படை கொண்டு வந்த அன்னியரை அண்ட விடாமல் அருஞ் சமர் புரிந்து வந்தவர்கள்; அழியாச் சிறப்பும் இணையிலா ஆற்றலும் படைத்தவர்கள்;

அன்னார், மரபின் மானமே பெரிதென அதனைப் போற்றி வந்தவர்கள்; சுதந்திரமே தேச மக்களின் பூஷணமென மதித்து வந்தவர்கள்; அது பற்றி, உடல், பொருள், ஆவி, மூன்றையும் ஒருங்கே வழங்கியவர்கள். சூரிய, சந்திர, அக்கினி என்ற மூவகைக் குலங்களிலே வீர வாழ்வுக்கும், வெற்றி மாலைக்கும் பெரிதும் பாத்திரமாயிருப்பது அக்கினி குலமே. நமது கதா நாயகியான தாராபாய் அக்னி குலத்தில் உதித்தவள்.

அவள் தந்தையின் பெயர் சூரதன். ஆதி காலத்திலே ராவ் என்னும் மொழி முடி-

மன்னரின் சிறப்புப் பெயராக விளங்கி வந்தது. ராவ் சூரதன் தன் பெயருக் கேற்ப மகா சூரனே யாவான். அவ் வேந்தன் பதினைந்தாவது நூற்றாண்டின் இறுதியிலே அரசு செலுத்தியவன். அவனது தாய் நாட்டின் பெயர் தட்ச சைலம் என்பதாகும்.

அக் குறுநாடு மத்தியபதி என்னும் மகிமை பொருந்திய நாட்டுக்கு அப்பால் உள்ளது. மத்தியபதிக்கு இக்காலம் ஆங்கிலத்தில் வழங்கி வரும் பெயர் மேவார். இதுவே இராஜபுதன நாடுகளில் இணையிலாப் புகழும் பெயரும் படைத்ததாகும்.

அக் காலத்திலே நமது தேசத்தில் முகம்மதிய மதத்தினர் முடி வேந்தராக வாழ்ந்து வர முனைந்து நின்றனர். அவ்விதம் முனைந்து நின்றவர்களில் ஒருவன் பெயர் மல்லூகான். இவன் பெரும் படை கொண்டு தட்ச சைலத்தைக் கைப்பற்ற முயன்றனன்.

அப் பொழுது ராவ் சூரதன் என்பான் தனது படையைத் திரட்டிப் போருக்குப் புறப்பட்டான். இரு திறத்துப் படைகளும் தட்ச சைல நகருக்கு அப்பால் சந்தித்தன. போரின் கடுமை கூறுந்தரமன்று. இரண



களத்தே வீரரின் தலைகள் உருண்டன; இரத்த ஆறு பெருகி யோடியது; முடிவிலே படை வலியையும் சூழ்ச்சியையும் கொண்டு மல்லூகான் வாகை சூடி விட்டான்.

அதன் பின், சூரதன் என்ன செய்ய முடியும்? மன வாட்டத்துடன் தன் பதியைத் துறந்து மத்தியபதி அடைந்தனன். அது கண்ட மத்தியபதி மன்னவனுக்கு மனந் தாளவில்லை; ஆதலால் அம்மேவார் வேந்தன் வேதநாம் என்னும் நகரை நம் சூரதனுக்குத் தந்து ஆதரித்து வரலானான்.

அத்தகைய ஆதரவு கிடைத்தும் சூரதனுடைய மனம் ஆறவில்லை; தாய் நாட்டை யிழந்து விட்ட ஒருவன் எங்ஙனம் மனம் சகிக்க முடியும்? தனது நாட்டை மீட்க வேண்டுமென அவன் பட்ட பாடு இவ்வளவு அவ்வளவு அன்று. ஆயினும் விதிவசத்தால் அவன் முயற்சி யொன்றும் பலிக்க வில்லை.

அப் பொழுது அவனுக்கு அருமை மகளொருத்தி யிருந்தனள். அவளது அழகின் நலத்தைக் கண்டும் கேட்டும் களியாதார் கிடையாது. அம்மாதை மனைவியாகப் பெற்று மகிழ வேண்டுமென ஆட

வரில் பலரும் ஆவல் கொண்டனர். ஆனால் அவளுடைய உள்ளக் கருத்தை நிறைவேற்றி வைக்க ஒருவராலும் ஆகவில்லை.

நாட்டை மீட்டுக் கொடுக்கும் வீரனைத் தவிர்த்து வேறு எவரையும் மணப்பதில்லையென்பதே அவளது உள்ளக் கருத்தாம். அக்காலம் மத்தியபதியில் அரசு செலுத்திய அரசன் பெயர் ராணு ரவி மல்லன்.

அவனுக்கு மூன்று பிள்ளைகள். அம் மூவரில் மூத்தவன் பெயர் சங்கர சிம்மன்; இளையவன் பெயர் பிருதிவி ராஜன்; கடையவன் பெயர் ஜய மல்லன்.

மைந்தருக்குள் நேர்ந்த மாறுபாட்டினால், சங்கர சிம்மன் மறைந்து விட்டான்; பிருதிவி ராஜனே தனது தந்தையினால் நாடு கடத்தப்பட்டுப்போயினன்; மூன்றுமவனை ஜய மல்லனே இளங் கோவாக இருந்து வந்தவன்.

தாரா பாயின் பேரழகைக் கேள்வி யுற்றவுடனே, அவளை மணக்க வேண்டுமென ஜய மல்லனுக்கு ஆசை பிறந்தது. அதற்கு அவளோ, "மைந்த! உனக்கு ஆண்மையிருப்பின், எனது தாய் நாட்டை மீட்டுத் தால் வேண்டும். அங்ஙனம் தருவாயானால்,



எனது மண மாலை பெற்று நீ மகிழலாம்" என்று சொல்லினள்.

அவ்விதமே தட்ச சைலத்தை மீட்டுத் தருவதாக அரசிளங் குமரன் வாக்களித்தான். ஆனால், அதற்குள்ளாக அவனுக்கு இளங்கோ வென்னும் செருக்கு சிறந்து நிற்கலாயிற்று; தாரா பாயின் மீதிருந்த ஆவலும் தலை மட்டம் கொண்டு விட்டது.

அது பற்றி அம்மைந்தன் தாரா பாயை முரட்டுத்தனமாகக் கை பிடிக்க முயன்றான். அது கண்ட சூரதனுக்கு மனம் பொறுக்கவில்லை; சுருங்கச் சொல்லின், சூரதனது வாளுக்கு ஜய மல்லன் இரையாகி விட்டனன்.

அச் செய்தி ராணு ரவி மல்லனுக்கு எட்டியது. உடனே ரவி மல்லன் துயர்க் கடலில் ஆழ்ந்து, "அந்தோ! மூத்தபிள்ளை போன விடந் தெரியவில்லை; இளைய பிள்ளையோ அடங்காப் பதட்டத்தினால் நாடு கடத்தப் பட்டுப் போயினன். மூன்றாவனோ மோகங் காரணமாக மாய்க்கப் பட்டுப் போயினன்.

"புத்திர சோகமும் பட்டத்துக்குப் பிள்ளையில்லை யென்ற பரிபவமும் ஒரு புறம்

கிடக்கட்டும். மத்தியபதி ராணாவின் மைந்தன் தனது வாக்கை நிறைவேற்றிவைக்காமல் வாளுக்கா இரையாவது!" என்று வருந்தி நின்றனன். அது கண்ட சிலர் ரவி மல்லனை யடைந்து, பழிக்குப் பழி வாங்க வேண்டுமென வற்புறுத்தினர்.

அதற்கு அவ் வேந்தன், "நன்று! நன்று!! பழிக்குப் பழியா வாங்குவது? தனது நாட்டை யிழந்து, தவிக்கும் சூரதன் துயரை யுணராது, மங்கையின் மனக் கோளையும் ஈடேற்றாது, மகளை முரட்டுத் தனமாகக் கை பிடிக்க முயன்ற மைந்தனைப் பெற்றெடுத்த எனக் கன்றே தண்டனை விதிக்க வேண்டும்?

"பேடியாம் ஜயமல்லனுக்கு அக்கதி நேர்ந்தது மிகவும் பொருத்தமே யாகும். அது பற்றி எனக்குச் சிறிதும் வருத்தமில்லை. அத்தகைய பிள்ளை ஏன் பிறந்தா னென்பதே எனது வருத்த மாகும். அங்ஙன மிருக்க, யான் எங்ஙனம் சூரதனைப் பழிவாங்கப் போவது? அவன் குறையைத் தீர்ப்பதன்றே எனது கடமையாகும்? அவன் மனத்தைக் குளிர்விக்க எனக்குத் தக்க மைந்த னொருவன் இல்லையே," என்று புலம்பி நின்றனன்.



அச்சமயத்தில் பிருதிவி ராஜன் வேற்றாரிடத்தே பெருமித வெற்றி கொண்டு விளங்கி நிற்கலானான். இதனால் தகப்பனிடமிருந்து பிருதிவிக்கு மன்னிப்புக்கிடைத்தது. தனது தம்பிக்கு நேர்ந்த கதியை யுணர்ந்தவுடனே, அப்பிருதிவி ராஜன் கொண்ட துடிப்பு கூறவொண்ணாது.

"தட்ச சைல நகரை மீட்டுக் கொடுத்து, தாரா பாயின் மணமாலையைப் பெறாது போயின், யான் உம் உதரத்தில் உதித்தவனல்லன்," என்று அவன் தன் தந்தைக்குச் சபதம் செய்து கொடுத்தான். அது கேட்ட ரவி மல்லனுக்குச் சிறிது ஆறுதல் பிறக்கலாயிற்று.

அதே சமயத்தில் பிருதிவி ராஜனது பெயரையும் புகழையும் தாராபாய் அறியலானாள். இராஜ புத்திரருக் குள்ளே பிருதிவி ராஜன் என்னும் பெயரே, பலரையும் மன மகிழச் செய்யும் மாண்புடையது. தாரா பாய், "அவ் வீரன் வந்து, நமது நாட்டை மீட்டுத் தாரானோ? அவனுக்கு மாலை சூட்டும் பாக்கியம் நமக்குக் கிட்டாதா?" என்று ஏங்கி நின்றாள்.

அவ்வளவில் வீர சிங்கமான பிருதிவி ராஜன் ராவ் சூரதனை யடைந்து, நாட்டை மீட்டுத் தருவதாக ஆறுதல் கூறினன். அவ்வுரை கேட்ட நங்கைக் கரசியும் மனமுவந்து, அவனுக்கு மாலை சூட்டி மகிழ்பூத்தனள்.

அப்பால் தட்ச சைலத்தை மீட்பதற்கான உபாயங்கள் அனைத்தும் ஆராயப்பட்டன. முடிவிலே பிருதிவி ராஜன் ஐந்நூறு வீரருடன் புறப்பட்டான் போருக்கு.

தாரா பாய்க்கோ தன் காதலனை விட்டுக் கணமேனும் பிரிய மனமில்லை. தவிர தாய் நாட்டை மீட்பதில் தானும் வீரம் விளைக்க வேண்டுமென அவளுக்கு ஆவலும் அதிகரித்து நின்றது.

ஆதலின், அவள் ஆண் உடை தரித்து, வாளும் வேலுந் தாங்கி, வீரனுடன் வீரனாகப் புறப்பட்டனள். வீரர் அனைவரும் தட்ச சைலத்தை யடைந்த சமயத்திலே, அங்கு அல்லாப் பண்டிகை நடந்து கொண்டிருந்தது.

அப் பண்டிகையின் கடைசி தினத்திலே ஆடம்பரமான ஊர்வலம் நடைபெறும். அந்த ஊர் வலத்திலே பிருதிவி ராஜன்,



தாரா பாய் ஆகிய இருவரும் கலந்து கொண்டனர். மற்ற வீரரோ நகரின் மதிள் புறத்தே மறைவாக நின்றிருந்தனர்.

ஊர்வலம் அப்பட்டாணியப் பார்த்திபனது மாளிகையை நெருங்கிற்று. அதனுடன் கலந்து கொள்ளக் காத்திருந்த அக் காவலன் தனது மாளிகையின் சாளரவழியே தலையை நீட்டி நோக்கினன்.

நோக்கியதும், "வேற்று மனிதரிருவர் ஊர் வலத்தில் தென்படுகின்றனரே! அவர்கள் யாவர் தெரிய வில்லையே," என்று அவன் சொல்லி வாய் மூடுமுன். தாராபாய் எய்திய அம் பொன்று அவனைக் கீழே வீழ்த்தி விட்டது; அவ் வம்புடன் தொடர்ந்து விரைந்து வந்த பிருதிவியின் வேல் கம்போ அவனது ஆவியைக் கவரலாயிற்று.

குலத் தலைவன் குற்றுயிருடன் தரையில் சாய்ந்தான் என்ற வார்த்தை கேட்டவுடனே, ஊர் வலத்திலிருந்த அனைவரும் திக் பிரமை கொண்டு நின்றனர். களியாட்டத்தில் கரை கடந்து மூழ்கிக் கிடந்தோருக்கு ஒன்றுந் தோன்ற வில்லை; கையும் காலும் நடுங்கத் தொடங்கின; உள்ளமும் ஒடுங்கிற்று.

அதுவே சமயமெனக் கண்ட காதலர் இருவரும் காலந் தாழ்க்காது தமது துணைவருடன் கூடிக்கொள்ளக் கோட்டை வாயிலைக் குறுகினர்; இதற்குள் அவ்வாயிலைக் காத்து நின்ற காவலாளனே தனது யானையின் மீதேறி வந்து அவ்விருவரையும் எதிர்க்கலானான்.

அக்குஞ்சரமோ போர் வெறி கொண்டு தனது துதிக்கையை நீட்டி அத்தாராபாயைத் தூக்கி யெறியத் தலைப்படலாயிற்று. அச் சமயம் தாராபாய் யாது செய்தாள்? பல பேடிகளைப் போல் கதிகலங்கிக் கருத்தழிந்தனளோ? அன்று! அன்று!! உடனே அவள் தனது உடைவாளை உருவி வெகு வேகமாக வீச, யானையின் துதிக்கை துண்டாகித் தரையிலே தெறித்து வீழ்ந்தது.

அதனால் படையானை பயமதிகரித்துப் புறங்காட்டி யோட, அதனை மடக்கித் திருப்ப மாவுத்தன் பெரிதும் முயன்றும் பலியாது போயிற்று. கையிழந்த யானையோ கோவென் றலறிக் கொண்டு ஓடியதே யன்றி, அப் பாகனுக்கு அடங்கி நின்று அமர் புரியத் துணிவு கொள்ளவில்லை.



இதற்குள், நகர்ப் புறத்தே காத்திருந்த ஐந்நூறு வீரரும் ஆயுதபாணிகளாக ஆவேசத்துடன் வந்து, தமது அரசனையும் அரசியையும் சார்ந்து நின்றனர். உடனே பட்டாணியர் போருக்கெழும்பி வந்தார்கள். ஆயினும், திடீரெனப் போர் மூண்டதாலும் பண்டிகை காலமானமையாலும், பெரும் படை திரட்டி வர, அப் பட்டாணியரால் ஆகவில்லை; தக்க போர்க் கருவிகளையும் தயாரித்துக்கொண்டுவர முடியவில்லை.

என்றாலும் அப் பட்டாணியரோ மகாவீர புருஷர்கள்; போரில் புறங்கொடுக்க ஒருப்படாதவர்கள்; அமர்க் களத்தில் வீரமே விளைத்து வாகை சூட விரும்புகிறவர்கள். ஆதலின் ஆண் சிங்கத்தைப் போல் அவர்களும் போர் புரியத் தலைப்பட்டார்கள். அன்று அவர்கள் புரிந்த சமரின் கொடுமையும் மூர்க்கமும் செப்புந்தரமல்ல! மலை மலையாகப் பிணங்களைக் குவித்ததால் தமது வாள் முனைகள் மழுங்கினவே யன்றி அவர்களுடைய மனம் சிறிதும் சலிக்கவில்லை.

போர்நூலதனில் பெரிதும் பழகிய நம் பிருதிவி ராஜனே தனது வாளுக்கு எற்ற வீரரைச் சந்தித்தோமென அக மகிழ்ந்து அளவிலா வீரங்காட்டி அமர்புரிந்தான்.

தாரா பாயும் தளர் வெய்ப தறியாமல் வெகு நேரம் வீரரைத் தனது வாள்கொண்டு வெட்டி வீழ்த்தி வந்தாள். ஒரு முகூர்த்த காலம் பட்டாணியரின் பக்கமே வெற்றி நிற்குமெனவும் பலர் கருதியிருந்தனர்.

அதுகண்ட தாராபாய் தனது காதலனை விட்டுப் பிரிந்து, பகைவரது படை வரிசைக் குள்ளே புலிப் போத்தெனப் பாய்ந்து, பட்டாணிய தளகர்த்தனைப் படுகளத்தில் சாய்த்து விட்டாள்.

தளகர்த்தன் தரையில் சாய்ந்ததைக் கண்டவுடனே, பட்டாணியப் படைகள் நிலை குலைந்து விட்டன; அது வரையில் அவர் களுக்கு அருந் துணையாக இருந்து வந்த ஆண்மையும் வீரமும் அகன்று போயின; உள்ளமும் உடலும் சோர்ந்து கருகின. பிருதிவியும் தாராபாயும் பேரிகை, சங்கம் முதலிய முழங்க, வாகை மாலை சூடி வரிசை பெற்று, சிங்கநாதஞ் செய்தனர்.

மாலையில் நடந்த போரிலே ஆவியைப் பறிகொடாமல் எஞ்சி நின்ற பட்டாணியரோ, ஒருவரும் அறியாவண்ணம் நள்ளிரவிலே தட்சசைலத்தைத் துறந்து போயினர். அது கேட்ட ரவிமல்லனும் சூரதனும் அளவிலா



ஆனந்தங் கொண்டனரென நாம் விரித் துரைக்கவும் வேண்டுமோ! முடிவாகக் கூறு மிடத்து, அவ்வெற்றி வீரனுக்கும் வீரமாதுக் கும் வேத விதிப்படி விவாகம் நடந்தேறியது.

அப்பால் நாட்கள் பல சென்றன. ராவ் சூரதன் மீண்டும் கண்பெற்ற குருடனேபோல் களிகூர்ந்து, அத் தட்சசைல நகரடைந்து முன்போல் அரசு செலுத்தி வந்தான்.

அக் குறு நாட்டைக் கைப்பற்றி யிருந்த பட்டாணியனுக்குப் பரிவுள்ள தம்பி யொருத்த னிருந்தனன். தன் தமையன் ஆவி யிழந்ததைக் கேட்ட அவனது மனம் பதை பதைத்தது. அக்கணமே அவன் தன் மூல பலத்தைத் திரட்டலானான்; விரைவிலே பெருத்ததொரு சேனையுடன் திரண்டு வந்து போருக் கழைத்தான் பிருதிவி ராஜனை.

போரென்ற பேச்சையே சோறாகக் கொண்ட பிருதிவிக்கு அஃது ஒரு சிறந்த விருந்தாகவே இருந்தது. தோள் தினவும், சமர்வேட்கையும் நிரம்பி நின்ற இளவரசனைச் சூழ்ந்து நின்ற பெரு வீரரோ மார்தட்டி முன்னணியில் நின்றனர்.

6859 6

வீரரிலே வீரனை பிருதிவியும், ஆண்மையே உருவெடுத்து வந்ததாகக்

415.2
N30.2

கூறத்தக்க அவ் வாடவனுக்கு ஈடான அம் மடமானும் போரில் புகுந்தன ரென்றால், பக்கத் துணையாகப் போக யாவரே பின்வாங்குவர்! பல்வகை முழக்கத்தினிடையே, வீராது கோஷம் வெதும்பிக் கிளம்ப, போர்க்கோலம் புனைந்து தாராபாயும் பிருதிவியும் அமர்க்களம் புகுந்தனர்.

இரு திறத்துப் படைகளும் உவரியே என்னக் கைகலந்து சமர் முறுக்கின. சண்டை மிக்க மும்முரமாகவே நிகழ்ந்து வந்தது. வெற்றியும் தோல்வியும் பகைவரிருவருக்கும் இடையே ஊசலாடி நின்றன. பட்டாணியனும் அனைது படைவீரரும் பழிவாங்கும் பான்மையுடன் கோபவெறி கொண்டு வாளை விசினர்.

தனது படையின் வீரம், பிருதிவியின் முன்னே பலிக்காது போயினது கண்டு மனமுறிந்து, கடைசியாகத் தன் முழுபலத்தையும் தொகுத்து மற்று மொரு முறை தாக்கிப் பார்த்தான் அப்பட்டாணியன். என் செய்தும் யாது பயன்?

பிருதிவியின் போர் வண்மைக்கும் தாராபாயின் தீரத்துக்கும் ஈடு கொடுக்க அம் மாற்றானால் இயலவில்லை. பெண்பா



லெனினும் புவியிலுள்ளோர் வியக்கும் வண்ணம் அவள் அரும்போர் புரிந்து, எண்ணிறந்த வீரரைப் பெருமைபெற வானுலக மனுப்பினள். அம்மாதின் முன்னம் பட்டாணியப் படைவீரர் பஞ்சுபோல் பறக்கலானார்கள். அன்று தாராபாய் புரிந்த போரைப்பற்றிப் பெருமையாகப் பேசாத சரித்திர ஆசிரியர் இல்லை.

# 4. இராணி சுந்தரவதி

போஜ ராஜ னெனும் அரசர் பெருமா ளொருவன் முன்னம் இப்பாரத பூமியிலே செங்கோ லோச்சி வந்தான். அவன் அழியாச் சிறப்பும் அளவிலா ஆற்றலுங் கொண்டவன்; பல் வேறு கலைகளையும் கற்றுணர்ந்த பரம பண்டிதன்; இப் பாரனைத்திலும் புகழ்க் கொடி தூக்கிய பெருந்தகையாளன்;

அன்னான், கற்றோரையும் மற்றோரையுங் கருந்தன மளித்துக் காத்து வந்தவன்; குடி மக்களின் நலத்தைக் கோரி, நீர் வளத்தை நிரப்பி, நில வளத்தைப் பெருக்கியவன்; சரித்திர ஆசிரியரிற் சிலர் செப்பும் வண்ணம், பதினோராம் நூற்றாண்டின் துவக்கத்திலே தனியரசு செலுத்தியவன்.

அன்னவன் கருங்கடலே போல் கட்டி வைத்த அரிய ஏரி யொன்று இரு நூற்றைம்பது சதுரமைல் பரப்புக் கொண்டது. சுற்றுப் புறங்களி லிருந்து மாரி நீரனைத்தும் அவ்வேரி தனில் வந்து குவிந்து பாயும்; அந்நீர் கரைபுரண்டு பெருகி வெள்ளப் பாழ் விளைக்கா வண்ணம், அத்துணை தூரத்திற்கும் அரிய பெரிய கல்லணை யொன்று கட்டப் பெற்றிருந்தது.

அக் கல்லணையினை மாந்தரனைவரும் போஜபால மென்றழைத்து வந்தனர். பூபாலம் எனவும் அதற்கு வேறொரு பெயருண்டு. அத்தகைய ஏரிதனைப் பதினைந்தாம் நூற்றாண்டதனில், முகம்மதிய மன்னவனொருவன் மண்ணோடு மண்ணாக்கி விட்டானென்பது சரித்திர வுண்மை.

போஜ ராஜன் பெருமையுடன் விளங்கிப் புரந்த மாநிலம் மாளவம் என்றழைக்கப் பெறும். அதன் தலை நகரம் தாரா நகரம் அல்லது தாரை நகர்; அம் மாநகரிலே அம் மகிபாலன் வடநாற் கல்விக் கழகமொன்று கவின் பெற நிருமித் திருந்தான்.

அஃது, 'சாரதாலயம்' என்னும் சிறப்புப் பெயர் கொண்டு, நெடுங் காலம் நிலவியதெனப் பலரும் நவில்வர். அக்கழக மிருந்த மாளிகைதன்னை முகம்மதிய வீர னொருவன் தகர்த்துத் தள்ளி விடவே, இப்போது அல்

லாவின் ஆலய மொன்று அங்கே ஆகாய மளாவ நிற்கின்றது.

அவ் வேந்தர் பெருமான் தனது குடிமக்களின் நலத்தைக் கருதிக் கட்டி வைத்த கருங்கட லேரியும் இருப் கல்லணையும் மறைந்து விட்டன வாயினும், அவற்றின் அரிய அறிகுறிகள் இந் நாளிலும் ஆங்கே இல்லாமலில்லை. ஆதலின், அன்று தொட்டு இன்று வரை அப்பூமியினை போஜ பாலம் என்றழைத்து வருகின்றனர். அது பற்றியே, ஆங்குள்ள குறு நாடு இக்காலத்திலும் போபால் என மருவி வழங்கி வருகின்றது.

அக் குறுநாட்டை இந் நாளிலே முகம்மதிய மரபினர் அரசாண்டு வருகின்றனர். ஆதியிலே அந் நாட்டினை வளம் படுத்தி அரசுகட்டி லேறியவன் பெயர் டாஸ்டு முகம்மது கான். அம் முகம்மது கானுக்கும் நமது கதா நாயகிக்கும் பதினெட்டாம் நூற்றுண்டிலே கடும் போரொன்று நிகழ்ந்தது. அதன் வரலாற்றை இங்கே விரித்துரைப் போம்.

பண்டைக் காலந் தொட்டு இப் பாரத தேசம் பலருக்கும் பிழைப்புக் கிடமான பல்



வளமுங் கொண்டு விளங்கி வருகின்றது. இப்போது நம்மைக் கட்டியாளும் ஆங்கில சாதியாருக்கு முன்னம், இங்கே அரசு செலுத்தி வந்த சாதியார் முகம்மதியராவர். அம் முகம்மதியரிலே மிக்க மத வெறியும் தக்க படை பலமும், அரிய மதிவன்மையும், படை வன்மையுந் தாங்கி விளங்கிய சக்கர வர்த்தி அவுரங்கசீப் எனப்படுவான்.

அம் மன்னர் மன்னன் இம் மண்ணுலகைத் துறந்து விண்ணுலகம் புகுந்த வாண்டு ஆயிரத்து எழுநூற் றேழாகும். அவனது காலத்திற்குப் பின்னர், இத் தேசத்திலே முகம்மதிய வல்லரசு முற்றிலும் மறைந்து விடலாயிற்று.

ஆயினும் ஆங்காங்கே சிற்சில சிற்றரசுகள் இல்லாமற் போகவில்லை. அவுரங்கசீப் ஆவி துறந்த வுடனே, இத்தேசம் தனது சீரிலுஞ் சிறப்பிலும் குன்றி நின்றதெனல் வேண்டும். அத்தகைய காலத்திலே டாஸ்டு முகம்மதுகான் என்பான் தனது பிழைப்பை நாடி இத்தேசம் வந்து சேர்ந்தான்.

அவன் ஆப்கானிஸ்தானம் என்னும் தேசத்தில் பிறந்தவன்; போராற்றலும் பெரு வீரமும் படைத்தவன்; போர்த் தொழிலில்

செவ்வனே பயிற்சி பெற்றவன்; தோளிரண்டுமே துணை யெனக் கொண்டவன்; ஆயிரத்து எழு நூற்றெட்டா மாண்டு, அவன் டில்லிமா நகரஞ் சேர்ந்து, ஆங்கிருந்து அரசு செலுத்திய பகதூர் ஷா என்பானிடம் மெய்காப்பாளனாக வேலைக் கமர்ந்தான்.

அப்போது டில்லி யரசு சீர் குலைந்து கிடந்தது; அங்ஙனங் கிடந்ததனால், தோள் வலி கொண்டு தனியரசு காண வேண்டுமென அவ்வீர புருஷன் பேராவல் கொண்டு நிற்கலானான்.

ஆனது பற்றி அவன் டில்லி நகரைத் துறந்து தென்திசை நோக்கிச் சென்றனன். அக்காலை தலைக்குத் தலை அம்பலமாகக் கிடந்ததனால், சில பல நகரங்கள் வெகு இலகுவில் அவன் வசப்படலாயின.

உடனே யவன் தனது சமயத்தையும் திறத்தையும் நிலை நாட்ட வெண்ணி, இஸ்லாம் நகரம் என்னும் நகர மொன்று நிருமித்தான். அப்பால், மேலே சொல்லிய போஜபாலம் என்னும் பூமியிலே புதிய பட்டன மொன்று கட்டுவித்து, அதற்குப் பூபாலம் என்று பெயரிட்டான். அதுவே இக்காலம்



ஆங்கிலத்தில் போபால் என மருவி வழங்கி வரும் நகராகும்.

அதனைச் சுற்றியுள்ள நாட்டினுக்கும் இந்நாளிலே அப்பெயர் தான் பிரபலம். நாடு பிடிப்பதிலேயே நாட்டங்கொண்ட முகம்மது கான் இன்னும் பல நகரங்களை வசஞ்செய்து வரிசை பெற ஆசை கொண்டான்.

அச்சமயம் அவனது நாட்டினருகே கின்னரகிரி யென்னும் குறுநாடொன்றிருந்தது. அதனை இராஜபுத்திர வீரமாதொருத்தி ஆண்மையுடன் ஆண்டு வந்தனள். அவ்வரசியே நமது கதாநாயகியான சுந்தரவதி யெனப்படுவாள்.

அந்நாளிலே கின்னரகிரி மத்திய இந்தியாவின் திலகம் போன்றிருந்தது; நல்வாழ்வுக்குரிய நலன்க ளனைத்தும் அந்நாட்டிலே நிரம்பிக் கிடந்தன; சுருங்கச் சொல்லின், திருமாமகள் அதனைத் தனது உறைவிடமாகக் கொண்டிருந்தன ளென்னலாம்.

இத்தகைய நாட்டின் நலத்தைக் கொள்ளை கொள்ள அக்கோமகன் கருதி நின்றான். அதற்கு அடிப்படையான காரணமொன்றுண்டு. அஃதென்னை யெனின், அச்

சுந்தரவதியின் எழில் நலம் அவ் வீரனது மனத்தைக் கொள்ளை கொண்டு நின்றதேயாம்.

கவிச் சக்கரவர்த்தியாங் கம்பர் கூறியிருக்கும் வண்ணம், 'வில்லொக்கு நுதலென்றாலும், வேலொக்கும் விழி யென்றாலும், பல்லொக்கு முத்தென்றாலும், பவளத்தை யிதமென்றாலும், சொல்லொக்குமே யன்றிப் பொருள் சிறிது மொவ்வா" தென்பது மிகையாகாது.

அவ்வீர புருஷனது தோழரிற் பலரும் சுந்தரவதியின் வனப்பை யெடுத்துரைக்கவே, அவன் மனமழிந்து தேயலானான். அது கண்டு அவன் துணைவரிற் சிலர் அக்கின்னரகிரியின் மீது சேனை கொண்டு செல்லலாமெனச் சொல்லி நின்றனர்.

அங்ஙனமே அம் மன்னவன் தனது படைகளுடன் புறப்பட்டு, " அம்மாதரசியைப் போரில் புறங்கண்டு ஆசை நோய் தீருவோம் ; இன்றேல் அவளது வாள் வீச்சை ஒரு துணையாகக் கொண்டு வீரசுவர்க்கம் புகுவோம், " என்று திடசித்தங் கொண்டு விட்டனன்.



பல்லாண்டுகளாக அக்கின்னரகிரிக்கு வடதிசையில் டில்லி வல்லரசும், தென்றிசையில் விஜயபுரி போன்ற முகம்மதியப் பேரரசுகளும் மொய்ம்புடன் விளங்கிநின்ற போதிலும், அந்நாட்டினை யடிப்படுத்த அவ்வரசுகளால் ஆகவில்லை.

வெற்றி யெனும் பூஷணமும் வீரமெனும் பெருங் கவசமும் பூண்டு நிற்கும் இராஜபுத்திர சிம்மங்கள் மாற்றானுக்கு முதுகு கொடுக்குமோ? கொடா ; ஆதலின் கின்னரகிரியின் நிருபதிகள் அன்னியரெவருக்கும் தலை வணங்காது வீரக்கொடி தூக்கியே தருக்கி வாழ்ந்து வந்தார்கள்.

அத்தகைய வழி முறையில் வந்துதித்த சுந்தரவதியின் படை வீரரனைவரும் பகைவனது வருகையினைக் கேட்டுப் போர்க்கோலம் பூண்டு புறப்பட்டனர். சுந்தரவதியென்னும் அந்தமுள்ள வீரமாதும் ஆடவருடை தரித்து, அருங்கவசம் பூண்டு, பெரும் படைக்கலன் பலவுந் தாங்கிப் போர் ஆவேசத்துடன் புறப்பட்டு, வெற்றி மாலையோ வீரசுவர்க்கமோ பெறல்வேண்டுமே யன்றி வேறெதனையும் சிந்திக்கக் கூடாதெனச் சிங்கநாதஞ் செய்தனள். பெண்பாலொருத்தி அவ்

வண்ணம் வீரம் பேசுகையில் ஆண் சிங்கமே போல் வீரம் படைத்த இராஜபுத்திரர் வேறு வார்த்தை விளம்பாது, போர்முனை நோக்கிப் போயினர்.

அச்சமயம் துர்ச்சகுனங்கள் சில நிகழ்ந்தன. அவை கண்டு சோதிட வல்லுநரும் வீரரும் சற்றே சிந்தை கலங்கினர். சுந்தரவதியரசியோ, "பெரு வீரர்காள்! துர்நிமித்தம் நிகழினுமென்! மாற்றானை முதுகு காணவியலாமற் போயினும், மேலுலகஞ் செல்வதரிதோ? முன் வைத்த காலைப் பின் வாங்காத பெருவீரருக்கு இனி யான் சொல்லக் கிடப்பது யாதுளது?" என்று சோர்வின்றிக் கூறலானாள்.

அவ்வளவில் வீரரனைவரும் வருவது வருக வென்றெண்ணி, வாட்டமென்பதின்றி வரிசையாகச் சென்று, சமர்க்களத்தில் குதித்தனர். அக்கின்னரகிரி நாட்டின் எல்லைப் புறத்திலே இருநிறத்துப் படைகளும் கைகலந்து கடும்போர் புரிந்தன. ஆசைநோய் கொண்டு கிடந்த முகம்மது கான் அளவிலா ஆற்றல்காட்டி அருஞ்சமர் செய்தான்.

சுந்தரவதியாம் வீரவாசியும் சீற்றங் கொண்டு சிறப்பாகச் சமர் முறுக்கினள். பகற்



பொழுது முழுதும் மும்முரமாகப் போர் நிகழ்ந்தது. மாலைப் பொழுது நெருங்கியவுடனே, முகம்மதியப் படைகள் களைத்துப் போயின. அது கண்ட வாசி அவர்களுக்கு ஆறுதலளிக்க வெண்ணிப் போரை நிறுத்தினள்.

இரவிலே இரு திறத்தினரும் அமர்க்களத்திலேயே இளைப்பாறி யிருந்தனர். நடுநிசியானதும் முகம்மதுகான் துயிலொழிந்து துணைவருடன் கூடிப் பேசி, அயர்ந்துறங்கும் இராஜபுத்திர வீரரைத் தாக்கத் தொடங்கினான் எச்சரிக்கையின்றி.

போர் நெறியை மதியாது முகம்மது கான் போர் தொடங்குவானென அச்சுந்தரவதியின் வீரர் சிந்தியாதிருந்ததனால் ஏமாந்து போய் விட்டனர். அது கண்ட வாசி தனது வீரருடன் பின் வாங்கி, அசைலகிரி என்னும் கோட்டையில் வந்து தங்கி நிற்கலானாள்.

ஆசைவெறி கொண்ட முகம்மது கானோ அவ்வெற்றி கண்டு களிப்புக்கொண்டு அக் கோட்டையினை முற்றுகையிட்டான். நிலை குலைந்து விட்ட வீரரைக் கொண்டு நெடுநாள் அக் கோட்டையினைக் காத்து நிற்க அம்மாதரசியினால் ஆகவில்லை.

அது பற்றி அவள் ஆங்கிருந்து பின் வாங்கி, வேதகிரி என்னும் கோட்டை சேர்ந்து, பகைவனை வழிமறிக்க முயன்றனள். அக்காலையிலே இருபக்கத்திலும் உண்டான உயிர்ச்சேதம் கொஞ்சமன்று. முடிவாகக் கூறுமிடத்து, முகம்மதிய வீரரே மொய்ம்புடன் கைமேலாகி நின்றனர்.

அவ்வளவில் அம்மங்கை நல்லாள் வேதகிரியையும் கை விடுத்து, வேறொரு கோட்டை சேர்ந்து, வைரங் கொண்டு வைரியை எதிர்க்கலாயினள். ஆயினும், கொண்ட கருத்து கை கூடாமற் போய் விட்டது. அவ்விதமே மற்றுமிரண்டு கோட்டைகளில் அவ்வரசி சில நாள் தங்கி நின்று, முகம்மதியப் படைவெள்ளத்தை மறித்துப் போட்டு முதுகுகாண முயன்றும் முடியவில்லை.

முடிவிலே அவ்வீரமாது வேறு வகையின்றி நருமதை நதிக்கரை தனிலிருந்து தலை நகராம் கின்னரகிரிக் கோட்டை வந்து சேர்ந்தாள். அக் காலையிலும் அவளது மனம் சிறிதும் சலிக்கவில்லை.

பெரியோர் கூறியுள்ள வண்ணம், 'வென்றவர் தோற்பர், தோற்றோர் வெல்குவர், எவர்க்கு மேலாய் நின்றவர் தாழ்வர், தாழ்ந்தோர் உயர்குவர், நெறியுமஃதே' என்றெண்ணி, மீண்டு மொரு முறை முயன்று பார்க்க முனைந்து நின்றாள். அப்போது இரு பக்கத்திலும் களப்பலியான வீரரின் தொகைக்குக் கணக்கில்லை. எனினும், முகம்மதியப் படை தனது தொகை வன்மையில் மெலிந்து விடாதிருந்தது.



இராஜபுத்திரப் படையோ அத்தொகை வன்மையில் பெரிதும் குன்றிவிட்டது. அது கண்ட தேவி முன்னையிலும் மும்முடங்கு மொய்ம்பு காட்டிச் சமர் செய்தனள். அற்றைப் போரிலே இருபக்கத்தினரும் சோர்ந்துப் போய் விட்டனர். அதனால் இரவிலே சண்டை ஓய்ந்து நின்றது. இடை விடாமல் நெடுநாள் போர் புரிந்து வந்ததனால், ஆற்ற முடியாத களைப்புக் காளாகி விட்ட அப்பெண்ணரசி சற்றே கண்ணயர்ந்தாள்.

அவளது வீரரும் அங்ஙனமே துயில் கொண்டு விட்டனர். அது கண்ட முகம்மதுகான் அஃதே சமய மெனக் கருதிப் பொழுது புலருமுன் நூலேணி கொண்டு

கோட்டை மதிலைத் தாண்டி நகருக்குள் புகுந்து விட்டான்.

பின்னர் முகம்மதுகான் அவ்வனிதையின் மாளிகை வாயில் நண்ணி, "பெண்கள் நாயகமே! உனதுடலுக்கும் உயிருக்கும் யாதோர் ஊனமு மிழைக்க யான் விரும்பவில்லை. எனவே உனது நாட்டுடன் எனது நாட்டையும் கைக்கொண்டு எனக்கும் அரசியாக விளங்குவாயாக," என்று தூது விடுத்தனன்.

முகம்மதுகானது தூதை யுணர்ந்த தேவி சிறிதும் தயங்காமல் சிந்தனையும் செய்யாமல், "வெற்றி வீர! உனது போர்த்திறனை என்னென்று எடுத்தியம்புவேன்! உனது நெஞ்சுறுதியையும் என்னென்று புகழ்ந்துரைப்பேன்! உனது பேராண்மையும் போர் வன்மையும் பேசுந் தரமல்ல. மணவினைக்குரிய கருமங்களைச் செய்து முடிக்க இரு முகூர்த்த நேரம் காத்திருப்பாயாக," என்று கூறிப் பதில் விடுத்தனள்.

அம்மறுமொழி கேட்ட முகம்மதுகான் கரை கடந்த களிப்பெய்தி, விநாடிகளை விரல் விட்டெண்ணிய வண்ணமாய் அம்மாளிகையின் அடித்தளத்திலே அடங்கா ஆவலுடன்



காத்திருந்தான். அங்ஙன மிருக்கையில், மாளிகையின் மேல்தளத்திலே மணவினைக்குரிய கருமங்கள் பலவும் கடிதில் ஆயத்தமாகி வந்தன.

அம்மங்கை நல்லாளும் மணக்கோலம் பூண்டு கொண்டாள். மணப்பறைகள் கல்லென்று ஒலிக்கலாயின; வேதியரும் பிறரும் ஈதென்ன விந்தையென வியந்து நின்றனர். அரசியின் ஆணைப்படி நடப்பதைத் தவிர்த்து, அவர்கள் வேறு யாது செய்ய வியலும்?

மேல் தளத்தில் மணக்கோலமும் அலங்காரமும் நிகழ்தல் கேட்டு முகம்மதுகான் கொண்ட களிப்பினுக்கு ஓர் அளவில்லையென்றே இயம்பவேண்டும். அவன் பக்கமிருந்த போர் முரசின் ஒலி மறைய, மணமுரசின் பேரொலியே நிரம்பி நிற்கலாயிற்று.

சிறிது நேரத்திற் கெல்லாம் மாளிகையின் மீதிருந்து தூதுவரிருவர் விரைந்து வந்து, முகம்மதுகானை யடைந்து, "அரசே! அரசியளித்த மணவாடைகளும் அணிகலன்களும் இவை; இவற்றை அழகுபெறத் தரித்தும் பூண்டும் மணமாலை பெற்று மனங்களிக்க ஆயத்தமாகுக" என்று கூறி நின்றனர் அனைவரு மதிசயிக்க.

அவ்வாறே அவன் தனது ஆடைகளையும் அணிகளையும் களைந்துவிட்டு, அரசி யளித்த பட்டாடைகளையும் பெருங்கலனையும் பூண்டு கொண்டு மனம் பூரித்தான்.

அரசி குறித்த இரு முகூர்த்த நேரங் கழிந்ததும், அமைச்சரும் வேதியரும் விரைந்து வந்து, கைலாகு கொடுத்து, முகம்மதுகானை மாளிகையின் மீதழைத்துச் சென்றனர். அவனது உயிர்த்தோழரில் ஈரிருவரைத் தவிர மற்றையோரனைவரும் மாளிகை வாயிலின் முற்றத்தே மகிழ்பூத்து அமர்ந்திருந்தனர்.

பெரும் புதையல் கிடைக்கப் பெற்ற பரம ஏழையே போல் முகம்மதுகான் பேரானந்தத்துடன் மாளிகையின் மேல் தளம் போய்ச் சேர்ந்தான். உடனே சேடியொருத்தி தோன்றி, அரும் பொன்னும் மணியும் வைத்திழைத்த ஆசன மொன்றைச் சுட்டிக் காட்டினள். அப் பொன்னாசனத்தில் அவன் பரம பூரிப்புடன் வீற்றிருக்கலானான்.

'சின்னேரத்திற் கெல்லாம் அவனது வதனம் வாட்ட மடைய லாயிற்று; உள்ளூர வெம்மை கொண்டு உருகிற்று; உரையும்



குழறத் தொடங்கியது; உடனே அருகிலிருந்த சிலர் அகங் குழைந்து பனி நீர் தெளித்து, சிவிறி கொண்டு விசிறி உபசரிக்கத் தொடங்கினர்.

அதன் காரணத்தை யுணராத அம் முகம்மதியன், "அந்தோ! என துள்ளமும் உயிரும் ஒருங்கே ஒடுங்கு கின்றன. என்றுமில்லா வெம்மையினால் இன்று வாடி வதங்குகின்றேன். என் செய்வேன் ஏழையேன்!" என்று பலவாறு புலம்பலானான். அதற்கு அக்கற்பரசி பகர்வாள் :—

"வசையற்ற வீர! என்னே உனது வீரத் தன்மை! மட மாதொருத்தி மீது படையேந்தி வந்தாய்! காதலையும் கத்தி முனையில் கைக் கொள்ளுதல் கூடுமோ? முன் பின் யோசியாது மணம் பேச முன் வந்தனை. மணப்பறையும் உடன் கொண்டு வந்தாய். அம் மணப்பறையே உனக்குப் பிணப் பறையாகப் போவதை நீ காண்கிலை. பத்தினிப் பெண்டிரின் சித்த மதைக் குலைத்தால் பாராளும் பார்த்திபரும் ஈடேற மாட்டார் காண். உனதுடலை மூடிக் கிடக்கும் ஆடையோ கடுவிட மூட்டப் பட்டதாகும். இனி யானே உன்றனை வென்றவ ளாவேன்.

எனினும் இனியொரு கணமேனும் யானும் உயிருடனிருக்கப் போவதில்லை. உன்னை யான் நோவதிலும், என்னை நீ நோவதிலும் பயனில்லை. விதி வழியே மதி செல்லு மென்பர் பெரியோர். அவ்விதிப் பயனை இருவேமும் இனிது நுகர்வோமாக ?"

இங்ஙனம் அம் மங்கை நல்லாள் கூறிய மாற்றங் கேட்டு, ஆங்கிருந்த அனைவரும் ஐயகோ என்று கூறவு முடியாமல் மதிகலங்கி நிற்கலாயினர். அவ்வளவில் சுந்தரவதி, 'அம்மை பவானியே! இனி யான் உன தடைக்கலம்' என்று சிந்தை குளிர வந்தனை செய்து, மாளிகையின் மதிற்சுவரை யடைந்து, அதனருகே யோடிய நருமதை யாற்றில் குதித்து மூழ்கி மறைந்து விட்டாள்.

முகம்மதுகான் தானணிந்திருந்த ஆடையனைத்தையும் களைந்தெறிந்து விட்டா னாயினும், கொடிய விடமோ அவனது உடல் முழுவதும் முன்னமேயே மூண்டு விட்டது. உடனே மரணக்களையும் வந்து மூடிக்கொண்டது. சிறிது நேரத்திற்கெல் லாம் அவன் சித்திரவதையினுக்கு ஆளான வன் போல் பதைத்து ஆவிநீத்துப் பாடு தீர்ந்



தான். அப்பால் அவ்விருவருக்கு முரிய ஈமக்கடன்கள் இனிது நிறைவேற்றப் பட்டன.

முகம்மதுகான் பூபால நகருக்குப் போகும் பாதையிலே அடக்கஞ் செய்யப் பட்டான். காதலும் கற்பும் முடிந்தவாறு என்னே!

# 5. கிருஷ்ண குமாரி

சீர்மிகப் படைத்த சித்தூர்க் கோட்டையிலே முன்னம் இருவர் பின் வருமாறு உரையாடா நின்றனர்.

"வீர! வீணே கலங்கி நில்லாதே! உன் தன் விருப்பத்திற்கு உகந்த பொருளை உன்பால் ஒப்படைக்க அன்றே எனது பெற்றோர் இசைந்துளர். உரிய காலத்தே அதனை நீ கைக் கொள்ளலாகும். ஆகவே இது காலை எனது மண மாலையை நாடி, நீ மறுக வொண்ணாது. நன்னுடான நந் நாட்டின் நிலையினை யுணராது நெறி கலங்குதல் வீரர்க்கு அழகாமோ? அந் நாள் தொட்டு இந்நாள் வரை அன்னியர் எவர்க்கும் அடி வணங்காத நம் மத்தியபதியின்மீது மொகலாய மன்னவனும் மகா அக்ப ரென்பான் அள விறந்த படை கொண்டு வந்து ஆரமர் புரிகின்றான். அன்னவனைப் புறங்கண்ட பின்பன்றோ இன்ப வாழ் வென்பதில் நாம் இச்சை கொள்ளலாகும்?"



"நங்காய்! மண வாளனு யிருந்து மண்டமர் புரிவதினும் காதலனு யிருந்து கடும் போர் புரிவானிவ் வேழை யென எண்ணுகின்றாய் போலும்! எங்ஙன மாயினும், கடுஞ்சமர் செய்வதில் இவ் வேழை சலியா னென்பது திண்ணம்

"ஆர்வத்திற்கு ஆளாகி நிற்கும் காளையே! வெற்றி வீர னொருவனே கிருஷ்ண குமாரியின் மண மாலை பெற்று மகிழலாகும். வீர வாழ்க்கை உன்றனக்கு உரிமையென இக்குமாரிக்குக் கேள்வி யுண்டு. ஆயினும், அதனைக் கண்ணாரக் காண வேண்டு மென எனக்கு அடங்கா ஆவலுளது."

"அணங்கனாய்! நன்று! நன்று! உனது பேரன்புக்குப் பாத்திர மென யான் மெய்ப்பிக்க வேண்டும் போலும்! இஃது என துள்ளத்தை ஊடுருவும் நிபந்தனை யன்றோ?"

"சுத்த வீர னொருவனுக்கு அங்ஙன மாகுமோ? ஒருக்காலுமில்லை. வெற்றி வீரனை வாரம் பேசுவோன் அங்ஙனங் கருதாது, வீரமே விளைத்து வாகை மாலை யுடன்

மண மாலை தனையும் மகிழ்ந் தேற்க முற்படுவான் அன்றோ ?"

"பெண்ணே! பேதுற வேண்டாம். உன்றன் மண மாலை பெற்ற மறுகணமே, நீ கோரிய வண்ணம் வீரம் விளைக்கப் பின் வாங்கான் இவ் வாலிபன். மேலும், இராஜ புத்திர னென்போனுக்கு இயற்கையான வீர வாழ்க்கை இக்காளையின்பால் ஓங்கி நிற்கு மென்ப துறுதியே யாம்."

"வீர சிங்கமே! வீண் கலக்கம் கொள்ளற்க. ஏனைய இராஜபுதன நாடுகளனைத்தும் மண்ணையும் பெண்ணையு மளித்து மகிழ்ந்து நிற்கையில், இம் மத்தியபதி மட்டும் மான்புடன் ஆண்மை கொண்டிருத்தல் நமது பேரரசுக்கு அழகாமோ வென அக்பரென்பான் அடங்காத் தருக்குடன் படைத் தலைமை வகித்துப் பெரும் போர் புரியுஞ் சமயத்து, மணமாலைபால் எவரேனும் மனங் கொள்ள இயலுமோ? அம் மகிபனுக்குத் தக்க மதி புகட்டுவதி லன்றோ நாமனைவரும் நாட்டங் கொள்ளுதல் வேண்டும்? சுத்த வீரனென்று பேசும் சூரியமல்ல! இக்குமாரியின் மண மாலைக்கு இலக்காக, உனது வாளும் வேலும் அவ் வேற்றரசனது மார்



பகத்தை ஊடுருவிச் செல்லல் வேண்டும்; அல்லது உன்றன் வில்லாண்மை அவ் வேந்தனைப் புறங் கண்டு பெருமிதங் காட்டல் வேண்டும்."

இங்ஙனம் அம் மங்கையர்க்கரசி மொழிந்த வுடனே, சூரிய மல்லன் என்பான் சிந்தையு மதியுங் கலங்கி, வந்த வழியே நோக்கி மறைந்து போனான்.

கிருஷ்ண குமாரியோ கன்னி மாடம் புகுந்து, "பவானி யம்மையே! இச்சித்தூர்க் கோட்டை முன்னம் அப் பட்டாணிய அல்லாவுதீன் கைதனில் சிக்கிச் சீரழிந்தது போதாதோ ?

"இக்காலை அக்பரின் கையிலும் பட்டுழல வேண்டுமோ? இராஜபுத்திர வேந்தரிலே ஏனைய மன்னவ ரனைவரும் மொகலாய அரசவையில் அலங்காரமாக அமர்ந்திருப்பதை ஒரு பொருட்டாகக் கருதித் தத்தம் மகளிரை மனைவியராகக் கொடுத்து மகிழ்ந்திருப்பினும், தமது மரபின் அருமை பெருமையினை மதித் தறியாது மதி மயங்கிப் போய் விட்டனர்.

"தலைசிறந்த மத்தியபதியோ தன் மரபின் மானமே பெரிதென மதித்து, மாற்றானுக்கு

முடி வணங்க மனங் கொள்ளாதிருக்கையில், மத்தியபதி மங்கை யொருத்தியைக் கை பிடிக்க அக் கொற்றவனும் அக்பரால் ஆருமோ? ஆகா தெனவே அக்காவலன் கண்டு கொண்டு, இம் மத்திய பதியைச் சேரழிக்கச் சீறி நிற்கின்றான்.

"பூப சிம்மனது வழி முறையில் வந்த வீர ரனைவரும் அவ் வேற்றரசனுக்கு ஆருயிரை வழங்கி, வீரசுவர்க்கம் புகுவரேயன்றி, மகளையும் வழங்கார்; மண்ணையும் வழங்கார், முடியும் வணங்கார், அடியும் வணங்கார்; இதனைச் சின்னாளிலே அம் மொகலாயன் மதித் துணராது போகான். மற்றைய இராஜபுதன வேந்தரும் மனம் கன்றி மதி பெறக் கூடும்.

"இந்நிலையிலே சூரிய மல்லனொருவன் மண மாலையை நாடி மன மறுகுகின்றான். அம்மை பவானியே! உனது திரு விளையாடல் நன்று! நன்று!! சித்தூர் சேரழிந்த பின்னரே உனது சித்தங் குளிரும் போலும்! எண்ணிறந்த உயிர்ப்பலி கொள்வதில், உனது சித்தம் திரும்பி விட்டதோ?

"அங்ஙனமாயின், நீ உவக்கும் வரையில், சித்தூர் வீரர் சிறிதும் சலியாது உயிரைப்



பலி கொடுக்க முனைந்து நிற்கின்றனர். அவ் வீரரைப் பின்பற்றி நடக்க நங்கையராம் நாங்களும் காத்து நிற்கின்றோம்" என்று கூறிப் பஞ்சணையில் சாய்ந்து பாவைபோலாயினள்.

சூரிய மல்லனும் கிருஷ்ண குமாரியும் உரையாடி நின்றதை யுணர்ந்த ஜகமல்லன் என்னும் தளகர்த்தன், "என்னே! சித்தூர் மகளிரின் துணிபு! சென்ற சில தினங்களில் எண்ணிறந்த வீரரை இழந்து விட்டோமாயினும், கிருஷ்ண குமாரி போன்ற வீர மங்கையர் விளங்கி யிருக்கும் வரை, சித்தூரின் வீரச் சிறப்பு சிறிதும் குன்றுதிருக்கு மென்பது திண்ணம். ஆதலின், முடிவு வரையில் மொய்யமர் புரிய முனைந்து நிற்போம். அப்பால் அம்மையின் அருள் போல் யாவும் நடக்கும்" என்று துணிந்தவனாய், வீரர் குழாங்களை அணி வகுக்கலானான்.

கிருஷ்ணகுமாரியை விட்டகன்றதும் சூரிய மல்லன் சிறிது நேரம் ஒன்றும் தோன்றாது திகைத்து நின்று, முடிவில் மாறுவேடந் தாங்கி, அக்பரின் பாசறை போய்ச் சேர்ந்தான்.

வேற்று மனிதனது வரவையும் வடிவையுங் கண்ட மொகலாய வீரர் அவ் வாலிபனை வதைக்கச் சீறி யெழுந்தனர். எனினும், சூரிய மல்லனது சொல்லொழுத்தைக் கண்டு அவ் வீரரின் சீற்றம் ஓரளவு தணியலாயிற்று. அதன் மேல் அவ் வாலிபனை அக்பரின் அவைக் களத்துக்கு அன்னோர் அழைத்துச் சென்றனர்.

மதிவன்மை மிகவுங் கொண்ட அம் மொகலாயன், “ஈதென்ன விந்தை? சித்தூர் வீரரிலே தேசத் துரோகியாக ஒருவனிருக்க வியலுமோ? மத்தியபதியின் மண்ணை மிதிக்கு மெவனும் அப் பதியின்பால் பேரன்பு கொள்ளாதிருக்க வியலாது. எனினும், இவ்வாலிபன் மெய்யாகவே தேசபக்தியற்று மாற்றானுக்குப் பேருதவி புரியப் போந்தவனோ? இன்றேல் வஞ்சம் விளைத்து வாகைசூட வந்தவனோ”? என்றெண்ணங் கொண்டவனாய், அச் சூரியமல்லனுடன் சித்தூர்க் கோட்டையின் திசையை நோக்கிச் செல்லலாயினன். அதுகாலை அக்பருடன் அதிக வீரர் செல்லவில்லை; மெய்காவலரிருவரும் படைத்தலைவர் மூவருமாக ஓர் ஐவரே உடன் போயினர்.



விற்கிடை தூரத்தில் சித்தூரை யணுகியவுடனே, அக் கோட்டையின் காவலரனைவரும் மதிலுச்சியில் வந்து குழுமினர்; அது கேட்ட ஜகமல்லனும் அவனது செல்வப் புதல்வியாம் கிருஷ்ணகுமாரியும் அவ்வுச்சியின் சாரலில் வந்து நின்றார்கள்.

மொகலாயப் படைகள் வந்து தாக்கத் தொடங்கு முன், உளவு பார்த்துச் செல்லு நிமித்தம் அக்பர் வந்துளானென்பதே இராஜபுத்திரரின் சிந்தனை யாயிற்று.

அங்ஙன மிருக்கையில், அக்பர் சூரிய மல்லனை நோக்கி, “வீரனே! உனது வேடமும் வார்த்தையும் ஒருங்கே உண்மையாயின், அதோ மலையுச்சியின் சாரலில் சிறப்புடன் நிற்கும் ஜக மல்லனது சிரம் உனது அம்புக்கோர் இலக்காகுமாக” என்று கூறினான்.

உடனே சூரியமல்லன் தனது வில்லை நாணேற்றி, அம்பினை அழகாக அமைத்து ஜகமல்லனது சிரத்தை நோக்கிக் குறி பார்க்கலானான். அது கண்டு, அக்பரின் அருகே நின்ற ஐவரும் ஒரு கணத்திற்குள் ஒன்னலனது சிரமறுந்து சிதறிப்போ மென்றெண்ணியவராய் இமை கொட்டாது விழித்து நின்றனர்.

அக்பரும் அங்ஙனமே ஆர்வமுடன்
பார்த்து நின்றான். இதுவே சமயமெனக்
கண்ட சூரிய மல்லன் இமைப் பொழுதில்
வலது பக்கம் திரும்பியதும், அம்பின் அடி
தாள மாட்டாமல் அக்பரென்பான் அலறி
வீழ்ந்தான்.

அவ்வளவில் வாலிப வீரன் அவ்
ஐவரையும் கொன்று குவித்து, அருகே நின்ற
பரியின் மீதேறி, நாலு கால் பாய்ச்சலாய்க்
கணப்பொழுதிற்குள் சித்தூர் சேர்ந்தனன்.

மொகலாயப் பாசறையிலிருந்து பரி
வீரர் விரைந்து வந்து, மூர்ச்சை கொண்டு
கிடந்த மன்னவனை வாரியெடுத்துக் கொண்டு
பாசறை புகுந்தனர். உடனே மருத்துவ
வல்லார் தோன்றி, அக்பரின் தோள்புற
மிருந்து வெகு தந்திரமாக அம்பைப் பறித்
தெறிந்து புண்ணை யாற்றினர். ஒரு பட்சம்
வரையில் அப்பார்த்திபன் தனது பாசறையை
விட்டகல வில்லை.

இதற்கிடையில் அவ்விராஜ புத்திரனும்
அக மிக மகிழ்ந்தவனாய் அரச குமாரியை
யணுகி, "எனதன்பே! நீ விரும்பிய வண்
ணம் மாற்றரசனது மார்பகலத்தை என்தன்



அம்பு அளவு கண்டு விட்டது. இனியாவது
என தெண்ணம் நிறைவேறாதோ?" என்று
பேராவலுடன் இரந்து நின்றான்.

அதற்கு அப் பெண்பால், "வாலிப!
மாற்றான் மாண்டு போயினனா? அங்ஙன
மாயின், உன்னையன்றி ஒருவருக்கும் மாலை
யிடேன்," என்றனள்.

சூரியமல்லன், "குமாரியே! இனி அம்
மொகலாயன் உயிர் தரியான், இது திண்
ணம்" என்று கூறியவளவில், சேடி
யொருத்தி விரைந்து வந்து, "அம்மணீ!
என் செயலாம்? சித்தூரைப் பிடித்த சனியன்
தொலையவில்லை. அந்த அக்பரென்பான்
உயிர் பெற்று எழுந்து விட்டானென ஒற்றர்
வந்து உரைக்கின்றனர்" என்றியம்பி நின்
றனள்.

அம்மொழி கேட்ட மைந்தன், "அந்தோ!
கைக் கெட்டுவதாயிருந்த கனி கை தவறியதே!
இஃது வினையின் விளைவே யன்றி வேறன்று"
என்றறிவு கலங்கி, வாட்டமுடன் அந்தப்
புரம் விட்டகன்றனன்.

அம்பின் வாய்ப்பட்டும் அதிர்ஷ்ட
வசத்தால் ஆருயிர் பெற்றெழுந்த அக்பர்

அடங்காக் கோபத்துடன் அருஞ்சமர் புரியக் கருதி, அணிவகுத்துக் கிளம்பினன். மொகலாய வீரரும் அங்ஙனமே உறுத்தெழுந்து போர்க்களத்தில் புகுந்தனர். எவ்விதமேனும் அக்கோட்டையினை வசஞ்செய்ய வேண்டுமென அவ்வேந்தன் துணிந்து, போர் நூலில் கண்ட உபாயமனைத்தையும் ஒருங்கே கைக் கொள்ளலானான். அதன்படி, மதில் புறமொன்றில் சுரங்க வெடிகள் சூழ்ச்சியுடன் அமைக்கப்பட்டன.

சிறிது நேரத்திற்கெல்லாம் அக்கோட்டையின் ஒரு சாரிலே பெரும் பிளவொன்று உண்டாகி விட்டது. அப்பிளவினிடையே கோட்டையினுட் புகுந்து விட, ஈராயிரம் மொகலாய வீரர் முன்னேறிச் செல்லலாயினர்.

ஆனால் சுரங்க வெடியில் ஒன்று தான் தீக்கொண்டு கிளம்பிய தென்பதையும், மற்றொன்று இன்னும் கிளம்பவில்லை யென்பதையும், அவ்வீரர் உணராது போயினர். சிறிது தூரம் அவர்கள் முன்னேறிச் சென்றவுடனே, மற்றொரு வெடியும் தீக்கொண்டு கிளம்பலாயிற்று.



அவ்வளவில் அவ் வீராயிரவரில் பலர் வெடி முழக்காற் செவிடுபட்டு வேசாறிப் போயினர். பின்னும் பலரோ வெடியின் வெம்மையினால் வெந்து சாம்பலாயினர்; மற்றுஞ் சிலரோ கால் வேறு கை வேறாகிக் கரிந்து போயினர். அங்ஙனம் அவதியுறாது பின்னே நின்ற எண்ணாயிரவர் ஏது மறியாது திகைத்து நின்றார்கள்.

முடிவில் முன் வைத்த காலைப் பின் வாங்குவதா என்னும் மொய்ம்பு அன்னாருக்குத் தோன்றலாயிற்று. அதன் மேல் அவர்கள் அப்பிளவை நோக்கி முன்னேறக் கருதினார்கள்.

ஆனால் இராஜபுத்திரரோ அம்மொகலாயரை முன்னேறவிடவில்லை; சுரங்க வெடியினால் சோராது எஞ்சியோரை வாள் வீச்சுக்கு இரையாக்கக் கருதி, வெகு வீரமுடன் வாட்போர் புரியத் தலைப்பட்டனர். சுருங்கச் சொல்லின், எண்ணாயிரம் மொகலாய வீரரில் எஞ்சி நின்று உயிர்ப்பிச்சை பெற்றோர் இருநூற்றுவரே.

மீண்டும் அக்பர் போரில் புகுந்தான். முன்னமே போல் கோட்டைச் சுவர்களைக்

குலைத்துவிடச் சுரங்க வெடிகள் வைக்கப்பட்டன. அச்சமயம் சித்தூர் தளபதி ஜகமல்லனென்பான் தனது அணிவரிசையை அழகாக அமைத்து, அன்னியரின் படைவரிசையை மதித்தறிய, மதிலுச்சி சேர்ந்து மறைவாக நிற்கலாயினன். அஃதுணர்ந்த அக்பர் தனது துப்பாக்கி கொண்டு, அத்தளபதியின் சிரத்தைக் குறிபார்க்க, அந்தோ! ஜகமல்லனது உடலம் மதிள்பாறையிலே உருண்டோடி விட்டது.

தளராத் தளபதி மரித்து விட்ட செய்தி கேட்டவுடனே, சித்தூர் வீரர் சிங்கநாதஞ் செய்து கிளம்பினர். அவ்வளவில் மொகலாய முன்னணிகள் முறிபடலாயின; உடனே அக்பர் சேனை அடியடியாகப் பின் வாங்க, சித்தூர் வீரர் அடியடியாக முன்னேறத் தொடங்கினர்.

இவ்வீரரை முன்னின்று நடத்திய தலைவனது திறத்தைக் கண்ட இராஜபுத்திரர் அனைவரும் பழிக்குப் பழியாக மொகலாய தளகர்த்தனை உயிர் வாங்காது திரும்புவதில்லை யெனச் சூளுரை பேசி, வாளும் ஈட்டியும் வாங்கி வீசவே, எங்குப் பார்த்தாலும் பிணக்காடே நிரம்பிவிட்டது.



இராஜபுத்திரரின் வீராவேசம் அங்ஙனமிருக்க, அவர்தம் தலைவனது தோற்றத்தைத் தொலைவில் நின்று தேர்ந்துணர்ந்த அக்பர் சக்கரவர்த்தி, "என்னே! இஃது ஆணுருவா? அல்லது பெண்ணுருவா? வீரச்செயலையும் போர்த்திறனையும் உற்று நோக்கின், ஆண்மையே வடிவு கொண்டு நிரம்பிய ஆடவனென்று கொள்ளல் வேண்டும்; முகவிலாசத்தையும் மேனியின் அழகையும் மதித்துப் பார்ப்பின், ஆண்மைக்கோர் இருப்பிடமான பெண்பிறப்பென்றே பகரல் வேண்டும். ஈதொரு புறமிருக்க, இத்தகைய வீரப்படை நமக்கு உளதாயிருப்பின், இந் நாடனைத்தையும் ஒரு குடைக் கீழ் அடிமைப் படுத்தல் ஒரு பொருட்டன்று" என்று எண்ணி வியந்து நின்றனன்.

அப்பால், அவ்வீரர் சிறிதும் சலியாது முன்னேறி வருவதையும், தனது படை வகுப்பினர் புறங்காட்டிப் பேதுறுவதையுங் கண்டு, பக்க பலந் தேடவேண்டி அக்கொற்றவன் தன் பாசறை திரும்பினன். அக்பரின் ஆணைக்கிணங்கி, மெல்மேலும் மொகலாயப்

படை துணைவலி பெற்ற போதிலும், இராஜ புத்திரரைத் தடுக்க முடியவில்லை.

இராஜபுத்திர வீரர் அக்பரின் பாசறையை அணுகி விட்டனர். அவர்கள் முன்னே, ஆணோ பெண்ணோ வென அக்பர் ஐயுற்ற அழகிய தலைவன் திரமுடன் முன்னேறி வருவதைக் கண்டதும், பொறுக்கான மொகலாயப் படைகள் வழி மறிக்கலாயின.

அஞ்சா நெஞ்சும் அடங்கா வெகுளியுங் கொண்டு நின்ற அவ்வாலிபத் தலைவன் தனது வேல் கம்பு கொண்டு அப் படைஞரைக் கணப்பொழுதிற்குள் கொன்று குவித்தான். உடனே மொகலாய தளகர்த்த னொருவன் முனைந்து வந்து, அவ்வீர புருஷனை எதிர்த்தனன்.

அவ்வளவில் வாலிபனது கூரிய ஈட்டியும் மொகலாயனது நெஞ்சத்தை ஊடுருவிச் சென்று விட்டது. அதன் மேல், மற்றுமொரு மொகலாய தளகர்த்தன் சினந்து வந்து தாக்கவே, வாலிபனது உடைவாள் அவனையும் விண்ணகமனுப்பி இரத்தக் கறையுடன் மிளிரலாயிற்று.



இங்ஙனம் வழி மறிக்க வந்த மாற்றார் அனைவரையும் மாய்த்த பின்பு, அக்பரின் பாசறை வாயிலை அவ் வாலிபன் குறுகினன். ஆங்கிருந்த காவலாளர் விரைந் தெழுந்து, வாலிபனது பரியின் பாதத்தை வெட்டி வீழ்த்தி விட்டனர்.

உடனே, அவன் பொத்தென்று பூமியில் குதித்து, வாளையுருவிச் சிறிய வளவில், காவலரிற் பலரும் கழுத்தற்றுக் குப்புற வீழ்ந்தனர். எனினும் எஞ்சி நின்றோரில் ஒருவன் தனது பட்டாக் கத்திகொண்டு அவ்வாலிபனது தோளிலும் தலையிலும் படுகாய முண்டு பண்ணி விட்டான். வாலிபத் தலைவனுக்குத் துணையாக வந்த அனைவரும் பகைவரால் கொல்லப்பட்டுப் போயினர்.

எனவே தனித்த நிலையையும் படுகாயத்தையும் பார்த்து, அவ்வாலிபன் சற்றே கலங்கினனாயினும் கருத்தழிய வில்லை. பகைவர் வந்து, மீண்டும் மீண்டும் படுகாயப்படுத்தி விடவே, வகையின்றி மூர்ச்சை கொண்டு அவன் நிலத்தில் சாய்ந்து விட்டான்.

உடனே அக்பர் அங்குத் தோன்றி, அவ் வீரனது திறத்தை மெச்சியவனாய், மருத்து

வரை வரவழைத்துக் காயமனைத்தையும் கட்டியாற்றும் வண்ணங் கட்டளை யிட்டனன். மருத்துவரின் திறமையினால், இரண்டொரு தினத்திற்குள் காயமெங்கு முள்ள காயத்தின் கொடுமை தணியலாயிற்று, அஃதறிந்ததும் அவ் வீரனது மஞ்சத்தை யணுகி அக்பர் பேசுவான்:—

"பெரு வீர! என்தன் இன்னுயிரை அந்தகனுக்கு அனுப்பிவிடக் கருதி இத்துணை தூரம் அருஞ் சமர் முறுக்கினாய். ஆயினும் அது கை கூடவில்லை. இது கிடக்க, உன்றன் உரத்தையும் திறத்தையுங் கண்டு மெத்தவுங் களித்தேன். அதன் அறிகுறியாக நீ வேண்டுவதைத் தட்டாதளிக்க விரும்பி யுள்ளேன்."

வீரன்:—மொகலாய வரசே! பகையினிமித்தம் உடைவாள்தனை யுருவிப் போர்க்களத்தே புகுந்த பின்னர், சுத்த வீரராயுள்ளோர் வைரியின் உயிரை வாங்க வேண்டுவரே யன்றி, வேறெதனையும் விரும்பார். நீ கூறிய வண்ணம், பழிக்குப் பழியாக உனது ஆருயிரைக் கவரவே அரும்பாடு பட்டேன்; உனது பாசறையின் வாயிலில் வந்து சேர்ந்தவளவிலே, எனது துணைவரனைவரும்



பொன்றி யிராது,. ஒரு சிலரேனும் உயிர் தரித் திருப்பின், யான் நினது கையில் சிக்கியிரேன்; எனது நோக்கத்தையும் ஈடேற்றியிருப்பேன்.

அக்பர்:—வாலிப! இப்போது பகைவனிடம் சிறையாகிக் கிடக்கின்றாய்! கிடந்தும், அவ் வெண்ணம் உளதோ?

வீரன்:—அரசே! எனதுடலில் இவ்வுயிர் நிற்கு மளவும் அவ் வெண்ணம் என்னைவிட் டகலாது. எனது தந்தையுயிரைக் கவர்ந்து நிற்கும் காவலனை எங்ஙன மேனும் பழி வாங்காது போயின், யான் இவ் வுடைவாள் தரித்து யாது பயன்? அங்ஙனம் பழி வாங்க வியலாது போமாயின், மீண்டும் போர் பொருது, வீர சுவர்க்கம் புகுவேன்.

அக்பர்:—வீர! விதியின்றி உனது தந்தையைக் கொன்று குவித்தேனே யன்றி வேறென்று. இனி நாமிருவரும் வேற்றுமை தீர்ந்து நேசமே கொண்டு வாழ்வதற்கு வகை யொன்றுளது. அவ்வகையில் உனக்கு விருப்ப மிருப்பின்.—

வீரன் :—பகைதனை முடித்தல், அல்லது வீர சுவர்க்கம் புகுதல் ஆகிய இவ்விரண்டி லொன்றை விடுத்து, வேறு எவ்வகையிலும் எனக்கு இம்மியளவும் விருப்ப மில்லை.

அக்பர் :—வீணே இன்னும் பகையை வளர்த்துக் கொண்டு போவதில் யாது பயன்? இரு பக்கத்திலும் எண்ணிறந்த வீரர் மண்ணைத் துறந்து போயுளர். எஞ்சி யுள்ளோரும் விண்ணேகி விட வேண்டு மென்பது உனதாவல் போலும்! வேண்டாம். யான் சொல்லும்...........

வீரன் :—இராஜ புத்திரரா யுள்ளோர்—அதிலும் சிறப்பாகச் சித்தூர் வீரர்—பகைவ னுரைக்கும் வகைதனைக் கேட்டு, வாழ விரும்புவரெனக் கனவிலும் நீ கருத வேண் டாம். சான் பிள்ளை யாயினும் ஓராண் பிள்ளை உயிருடனிருக்கும் வரையில் சரணா கதியிலே சித்தங் கொள்ளார் சித்தூர் வீரர். போரை நிறுத்திப் பொறுமையுடன் வாழ மன மிருப்பின், உனது படைத் தொகை யைச் சுருட்டிக் கொண்டு, புறங் காட்டிப் போவாயாக! அங்ஙன மாயின், ஒருவாறு பகை தீர்ந்ததென எனது துணைவர் சிறிதே



ஆறுதல் கொள்வர். ஆனால் யான் மட்டும் பழிக்குப் பழிவாங்க வியலா வண்ணம், பகைவன் புறங்காட்டி விட்டனனே யென்று வருந்தி யிருக்க நேரும்.

அக்பர் :—பகைவனது பாசறையில் பட்டுக் கிடக்கும் உனதுயிரை ஒரு நொடிப் பொழுதில் போக்கிவிட என்னாலாகு மென்பதை நீ நன்கறிவாய். அவ்வாறிருந்தும் வீரமே பேசுகின்றாய்.!

வீரன் :—அக்பர்! உயிருக்கும் வரை யில் இவ் வீரம் என்னை விட்டகலாது. இச் சமயம் எனதுயிரை வெகு இலகுவில் வாங்கி விட உன்னாலாகும். ஆயினும், சுத்த வீரரா யுள்ளோர் அங்ஙனஞ் செய்யச் சிந்தனை கொள்ளார். சிந்தனை கொள்ளின், அது சுத்த வீரர்க்கு அழகு மன்று, ஆண்மையு மன்று. எனினும், எனதுயிரைக் கவர வரு வோரை எனது வாள் கொண்டு முடிவு வரை யில் வீசித் தள்ளுவே னென்பது திண்ணம். யாது நினைத்தாய்? ஐயுறவுளதேல் பரீட்சை பார்க்கலாம்."

இவ்வாறெல்லாம் அவ்வீரன் தீரம் பேசியதைக் கேட்ட அக்பர் சக்கரவர்த்தி

அடங்கா வியப்பெய்தி, "வெற்றி வீர! உனது மன நிலையை மதித்தறியவே இத் துணை தூரம் உன்னுடன் உரையாடி நின்றேன். சித்தூர்க் கோட்டையை வசஞ் செய்து கொள்ளாது, வந்த வழியை நோக் கிச் செல்ல, ஒருநாளும் உடன்படேன்; நீயும் உனது துணைவரும் பகை முடிக்க வேண்டு மென்றே பரம துணிவு கொண்டு போர் புரிவதையும் நன்குணர்வேன். இனி நாமிருவரும் பேசிப் பயனில்லை. மீண்டும் போரில் புகுவதிலேயே கருத்துக் கொள்ள வேண்டும்" என்று கூறி, அவ்வாலிபனைத் தக்க காவலுடன் சித்தூருக் கனுப்பிவிடச் சித்தங்கொண்டான். ஈதிங்ஙன மிருக்க.

சித்தூர் வாசிகளோ, "ஐயகோ! அம்மை பவானியின் அருளையிழந்து விட்டோம். இல்லையேல் நமது குலத்தலைவனும் தளகர்த் தனுமான ஜகமல்லன் மாண்டிருப்பனோ? நமது படை வீரரிலும் இருபதினாயிரவர் மரித்துப் போயினரே! எஞ்சியுள்ள ஐயாயிர வர் யாது செய்வர்?

"பகைவனோ பெருமித வலியுடன் தருக்கி நிற்கின்றான். அவனைப் பழிக்குப் பழி வாங்கி வருவதாக வீரம் பேசி, ஆளுடை



தரித்து அருங்கலம் பலவுந் தாங்கி, அந்த மாகச் சென்ற கிருஷ்ணகுமாரி தனது துணை வருடன் விண்ணேகி விட்டதாகத் தூதுவர் வந்து பேசுகின்றனரே!

"இனி, யாரைக் கொண்டு கோட்டையினைக் காக்க முயலுவோம்? ஏகலிங்க மூர்த்தியே! உனது இன்னருள் நன்று! நன்று!! அம்மை பவானியே! உனது பேருளும் பறந்து விட்டதோ? இனி என் செய்வோம்!" என்றேங்கி நின்ற சமயத் திலே, அவ்வாலிப வீரன் சித்தூர் சேர்ந்தான். உடனே அனைவரும் ஆளுடையிலிருந்த கிருஷ்ண குமாரியைக் கண்டு, இனி நமது கவலை ஒருவாறு அகன்ற தென உள்ளங் களித்தனர்.

பகைவன் கையில் பட்ட படுகாயத்தின் அதிர்ச்சியினால், இரண்டொரு நாள் காறும் கிருஷ்ணகுமாரி படுத்த படுக்கையிலிருக்கும் வண்ணம் நேர்ந்தது. அப்பால் அவள் முன்னமே போல் போருக்கெழுந்தனள். படை வீரரும் பதையா தெழுந்து, போர்க் களத்தே சிங்கம் போல் சீறிக் குதித்தனர். உடனே இரு பக்கத்து வீரருக்கும் கைகலந்த சண்டை நடக்கலாயிற்று. வீர சுவர்க்க

மொன்றைத் தவிர வேறு வகையில்லையென்று கண்ட இராஜபுத்திரர் தமது மரபுக்குரிய வீரங்காட்டிச் சமர் செய்தனர்.

அத்தகைய வீரரிடம் சிக்கி, அக்பர் படைகள் பட்டபாடு பேசுந்தரமன்று. மொய்ம்புடன் வந்த ஈராயிரம் மொகலாயரில் இரு நூறு முந்நூறு பெயரே உயிர் தப்பியோடினர். குமாரியுடன் துணையாக வந்த ஐந்நூறு இராஜபுத்திரரில் நானூறுக்கு மேற்பட்ட வீரர் நாசமாகி விட்டபோதிலும், எஞ்சி நின்ற வீரர் எள்ளளவும் சலியாது சமர் முறுக்கியதனால், மொகலாயரின் கதி அதோகதி யாகி விட்டது.

அது கண்ட அக்பர், "இவ்வீரரின் திறத்தை என்னென்று இயம்புவது! நம்மைப் போல் தக்க படை வலி பெற்றிருப்பின், இவர்களின் முன்னே நாம் தலை நீட்டியிருக்க வியலாது. இத்தகையோரை இச்சகம்பேசி வசஞ் செய்ய முயன்றும் பலிக்கவில்லை. இனி, போரை நெடுநாள் வளர்த்துப் பயனிராது. ஆதலின், விரைவிலே முடிவு கண்டு விடவேண்டும்" என்று துணிவு கொண்டான்.



உடனே மொகலாயப் படைகள் திரண்டெழுந்தன. பதினாயிரம் வீரர் ஒன்று கூடி அச் சித்தூர்க் கோட்டையை நான்கு பக்கத்திலும் தகர்க்கத் தொடங்கினர். ஒரு வார காலம் மொகலாயச் சேனை அவ் வேலையிலேயே முனைந்து நின்றதால், முடிவிலே கோட்டையும் கலகலத்துப் போய்விட்டது.

அவ்வளவில் கிருஷ்ண குமாரி கோட்டைக் கதவுகளைத் திறந்து போட்டு, ஓராயிரம் இராஜபுத்திரரை ஒன்னலரின் மீதேவினள். வீரரும் வீரசுவர்க்கங் கிட்டியதென்று பகைவரின் மத்தியில் பாய்ந்து கர்ஜனை புரிந்தனர். பட்டாக்கத்திகள் பளபள வென மின்னலாயின. வீரரின் சிங்கநாதமோ எதிரொலி யெழுப்பி எங்கும் செவிடுபடச் செய்தது. உயிரை ஒருங்கே வழங்க வந்திருக்கும் உத்தம வீரர், ஒருவரையும் விடாது கொன்று குவிப்பரென மொகலாயர் மதிகலங்கலாயினர்.

பல சொல்லிப் பயனென்ன? சித்தூர் வீரர் சென்ற விடமெல்லாம் சிரங்கள் அறுந்து விழலாயின. பதின்மடங்கு ஆள் வலி பெற்றிருந்தும், அக்பரின் சேனை ஈடு கொடுக்க முடியவில்லை. பற்பல போர்க்

களங்களில் பட்டுழன்று பண்பட்ட வீர அக்பரும் பதறிப் போயினன்.

ஆயினும் அக்பர் சக்கரவர்த்தி தனது படை வருப்பை உற்சாகப் படுத்த வேண்டி, தானுமொரு படை வீரனாக நின்று சமர் செய்யத் தவறவில்லை. அக்பரையே இலக்காக நோக்கி வந்த கிருஷ்ண குமாரி தனது ஆண் வேடத்திலிருந்த வண்ணம் இரு முறை தனது வாள் கொண்டு அவ் வேந்தனைப் படுகாயப்படுத்த, இருப்புக் கவசமோ அவனுயிருக்கோர் அரணாக நின்றது.

முடிவில் ஆயிரம் இராஜபுத்திர வீரரில் ஓர் இருபதின்மரே உயிர் தாங்கி நிற்பதைக் கண்ட குமாரி, "கடை நாள் கிட்டி விட்டது; காரிகையரின் கதியைக் கவனிப்போம்" என்று கருதியவளாய் வெகு தந்திரமாகப் பின் வாங்கிச் சென்று, சித்தூர் அரண்மனை சேர்ந்தனள்.

அவ்வளவில் மங்கையர் திலகமாய்ச் சித்தூரிலே உயிர் கொண்டு நின்ற அத்தனை மங்கையரும் அரண்மனையின் அருகிருந்த சுரங்கவறையின் வாயிலில் வந்து குழுமினர்.



உடனே ஆகாய மளாவ சுவாலை வீசும் அக்கினி குண்டமொன்று வளர்க்கப்பட்டது. கிருஷ்ண குமாரியின் அருமைச் சோதரியான அகலியா பாய் என்பாளை முன்னிட்டுக் கொண்டு, அப் பெண்களனைவரும் ஒருவர் பின் ஒருவராக அத்தியில் குளித்து ஆருயிர் நீத்தனர்.

அதன்மேல் அன்னிய ஆடவர் விரும்பத் தக்க பெண்டிரெவருமில்லையெனக் கண்ட கிருஷ்ணகுமாரி கடைநாளின் முடிவைக் காணப் புறப்பட்டனள். அது கண்ட சூரிய மல்லன் அடங்காத் துயருடன் அம் மங்கையினெதிரே தோன்றி நின்றனன்.

குமாரியோ சுளித்த முகத்தினளாய் அச் சூரிய மல்லனை ஏறிட்டுப் பாராது செல்லவே, "நங்காய்! வெறுப்பேன்? காமங்கொண்டு காண வந்தேனில்லை. நீ சொல்லிய வண்ணம் அக்பரின் ஆருயிரை வாங்காது போயினும், கடை நாளிலே உன்னுடன் கூட இருந்து, ஒருங்கே வீரசுவர்க்கஞ் செல்ல விரும்பியுள்ளேன்" என்றிரங்கிக் கூறினன் சூரிய மல்லன். "அங்ஙனமாயின், உடன் வர அனுமதிதான்" என்று குளிர்ந்த முகத்துடன் கூறினள் கிருஷ்ண குமாரி.

பின்னர் அவ்விரு துணைவரும் எஞ்சி நின்ற வீரருடன் நகரவாயிலைக் குறுகினர். இதற்குள் மொகலாயச் சேனை அவ்வாயிலைக் கடந்து, நகரினுள்ளே தலைகாட்ட முயன்று நின்றது. அவ்வளவில் சித்தார் வீரர் சீற்றமே கொண்டு, அம் முகம்மதிய வீரர் ஒவ்வொருவரையும் வாளுக்கிரையாக்கத் தொடங்கினர்.

கோர யுத்தம் நிகழ்வதைக் கேள்வியுற்ற மொகலாய மன்னவன், ஆண் வடிவந் தாங்கி நிற்கும் அக் குமாரியை எங்ஙன மேனும் சிறை செய்துவிட விரும்பி நின்றனன். மொகலாய வீரரும் அக் குமாரியைக் கைப் பற்றக் கடும்போர் புரிந்து பார்த்தனர்.

உடலெங்கும் காயமுண்டு, உதிரம் ஒழுகி யோடினும், ஒருவரையும் அருகே அண்ட விடாது, உக்கிரமாக நின்ற குமாரியைச் சிறை செய்ய இயலவில்லை. முடிவில் அம் மங்கையை மாய்த்து விடுவதே மேலென மொகலாய னொருவன் முனைந்து வந்து, அவளது முகத்தைக் குறிபார்த்து வாளை வீசினன். ஆனால் கண்ணிமைப் பொழுதிற்குள் அம் மொகலாயனே குமாரியின் வாள் வீச்சால் வாடி வீழ்ந்தான்.



எத்துணை நேரம் ஒரு சிலர் பெரும் படையொன்றை எதிர்த்து நிற்கக்கூடும்? கையும் கருத்துஞ் சலிக்கும் வரையில் பகைவரைச் சாய்த்து வந்து, முடிவிலே அவ்விரு துணைவரும் வீரசுவர்க்கம் புகுந்து களிக்கலாயினர். பின்னரே அக்பரென்பான் அந்நகரினுள்ளே அஞ்சாது செல்லலானான். பெண் வீரமோ, சாருமளவும் அவன் மனத்தை விட்டகலா திருந்ததென அனைவரும் கூறுவர். வீரம் வாழ்க!

# 6. மகாராணி சந்திரமதி

பஞ்சநதிப் பிரதேசம் பழமையும் பெருமையும் பொருந்தியது. அஃது ஆரியரின் புராதனமான உறை விடமாம்; வேதங்களும் வேதாங்கங்களும் அங்குத்தான் முதன் முதலாக ஓதப் பெற்றன. அன்னியர் இத் தேசத்தினுள்ளே பிரவேசிப்பதற்கு அப் பிரதேசமே தலைவாயில்போல் நெடுநாளாக விளங்கியதாகும்.

அப் பிரதேசத்திலே வசிக்கும் மக்களில் பெரும்பாலார் சீக்கியர் என்னப்படுவர். சென்ற நூற்றாண்டின் மத்தியிலே, அதன் அதிபதியாக விளங்கியவன் இரஞ்சித சிம்மன் எனப்படுவான். பஞ்சாப் சிங்கம் என அவனுக்கு ஒரு சிறப்புப் பெயர் உண்டு. அவன் அரியணை ஏறிய காலத்திலே, ஆங்கில வர்த்தகக் கூட்டத்தினர் சிறிது சிறிதாக இப்பூமியின் பெரும் பாகத்தைக் கைப்பற்றி யிருந்தனர்.

சுதேச அரசுகள் பலவும் ஒன்றன்பின் ஒன்றாக உரிமை யிழந்து, அன்னியரின்



வசமாவது கண்டு, இரஞ்சித சிம்மன் அடங்காத் துயரும் ஆத்திரமும் கொண்டனன். ஆனது பற்றி, போர்க்குணமும் பெரு வீரமும் படைத்த தனது சீக்கிய மக்களின் துணை கொண்டு, காந்தாரத்திலிருந்து டில்லி வரையில் உள்ள நாடுகள் பலவற்றையும் அவன் தன் வசமாக்கி வீரக் கொடி தூக்கினான்.

வர்த்தகக் கூட்டத்தினர் அஃதறிந்து அச்சமும் திகிலும் ஒருங்கே கொண்டு, அம் மன்னவனைப் புறங்காணக் கருதி, பிரம்மப் பிரயத்தனம் செய்தும், அம் முயற்சி பலிக்கவில்லை. முடிவிலே அம் மன்னவன் மாயமாக மாண்டு போயினன். பகைவரின் சதி காரணமாகவே இரஞ்சித சிம்மன் இறந்து பட்டனன் என்னும் வதந்தி உலாவத் தொடங்கிற்று. அவ் வேந்தன் விண்ணேகும் காலையில், அவனுக்கு மக்கள் மூவர் இருந்தனர். அவர்கள் காரகசிம்மன், சேர சிம்மன், திலீபசிம்மன் என்று அழைக்கப்படுவார்கள்.

சூரியன் மறைந்த பின்னர், வான வீதியிலே பற்பல உடுக்கள் தோன்றி மிளிர்வது போல், இரஞ்சித சிம்மன் இறந்ததும்,

அவனது படைத் தலைவரிலும் அமைச்சரிலும் பற்பலர் கிளம்பி அரசை நசி, அடாத செயல் புரியத் தலைப்பட்டனர். ஆதலின் மூத்த மைந்தன் காரகசிம்மன் அச்சதிகாரரால் கொலையுண்டனன். பின்னர் மகுடந் தரித்த சேரசிம்மனுக்கும் அக்கதியே கிட்டிற்று.

நாதன் மரித்த நான்கு ஆண்டுகளுக்குள், இருவர் அரசர் கொல்லப்பட்டுப் போகவே, பஞ்சநதிப் பிரதேசத்தில் உள்நாட்டுக் கலகமும் குழப்பமும் நிரம்பி விட்டன. அதன் விளைவாக ஒவ்வோர் அமைச்சனும் தளகர்த்தனும் மாறி மாறி அரியணையில் அமர முயன்று, அப்பால் கொலையுண்டு கூற்றுவனுலகம் சேர்ந்தனர்.

இரஞ்சித சிம்மனது தேவி சந்திரமதி மனம்பொறாமல் தனது கடைசிப்பிள்ளை திலிபசிம்மனைச் சிம்மாசனத்தில் இருத்தித் தானே அரசியலை நடத்தத் தொடங்கினாள். அப்பொழுது திலிபசிம்மனுக்கு வயது ஐந்து தான்.

அவ்வரசி பெருமதி வாய்ந்தவள்; ஆற்றல் மிகப் படைத்தவள்; மேலும்



ஊக்கத்தில் ஊற்றுப் போல்வாள். மந்திரி சபையில் மதிவன்மை காட்டுவதுபோலவே, போர் முகத்திலும் பெரு வீரம் காட்டக் கூடியவள். இரஞ்சித சிம்மனது அருங்குணங்கள் அனைத்தும் அவளிடம் குடிகொண்டிருந்தன.

ஆதலின் பரநலத்தைத் துறந்து சுயநலத்தில் சொக்கி, நாட்டை நிர்மூலம் செய்து நின்ற அமைச்சரையும் படைத்தலைவரையும் அம்மாதரசி தனது சொல்வன்மை கொண்டு நல்வழிப்படுத்தினாள்; சிதறிக்கிடந்த சீக்கிய சேனையைத் திரட்டி வலிமிகப் படைத்த பெருஞ்சேனையாக்கினாள்; அரசின் பொறுப்பான பதவிகளிலே தக்கோரையே அமர்த்தி, ஓர் ஒழுங்கு செய்தாள்; ஆண்மையாளரையும் சத்திய சந்தரையுமே படைத் தலைமையில் இருத்தினாள். இத்தகைய நேர் முறைகளால் நாட்டின் சீர்கேடு ஒருவாறு நீங்க, எங்கும் நலமும் பலமும் வளமும் வலியும் சிறிது சிறிதாகப் பெருகலாயின.

சண்டைக்கு எடுபிடி மாடுபிடி என்பர். அங்ஙனமே வர்த்தகக் கூட்டத்தினர் சமயம் பார்த்திருந்தனர். பஞ்சநதிப் பிரதேசத்தின் கிழக்கெல்லை நெடுக எதிரிகளின் நாடுகள்

இருந்தன. அந்த எல்லைப் புறத்திலே நாள் தோறும் அன்னாரின் படைகள் போர்க் கோலத்துடன் நின்று கொண்டிருந்தன.

அரசியும் முன் ஜாக்கிரதையாக அந்த எல்லைப்புறத்தில் தனது வீரரைக் காவல் புரிய அமர்த்தினாள். அங்ஙனமிருக்கையில் எல்லைகடந்து சிக்கியவீரர் வந்துவிட்டன ரெனச் சொல்லி, எதிரிகள் போர் முரசு கொட்டினார்கள். ஓராண்டுகாறும் பெருஞ் சமர் நடக்கலாயிற்று.

அச்சமரில் சேனைத்தலைமை வகித்து சலியாமல் சமர் முறுக்கிய பெருமை சந்திர மதிக்கே உரித்தாகும். அவளைப் போர் முனையிலே வெல்லுதல் மிக அரிதாயிற்று. ஆதலின் எதிரிகள் தங்களுக்கு இயற்கையான இராஜதந்திரத்தைக் கையாளலானார்கள். சிக்கிய அமைச்சரிலும் தளகர்த்தரிலும் பலர் மானாபிமானம் அற்று, மாற்றாருக்கு அந்தரங்கத்தில் உதவி புரியத் தலைப்பட்டு விட்டனர்.

ஒரு சமயம் போர் முனையிலே தள கர்த்தர், படைத்தலைவர் யாருமின்றி அம் மாதரசி தன்னந் தனியே நின்று தன் வீரரை



உற்சாகப்படுத்த நேர்ந்தது. அப்பொழுது அவ் வீரவரசி சிறிதும் சலியாமல் மலை போல் நின்று மண்டமர் புரிந்தனள். போரை அங்ஙனம் நடத்துகையில் அரசி யலையும் அம்மாது அவ்வப்போது கவனித்து வர நேர்ந்தது. அது கண்டு வீரலக்ஷ்மியே வடிவெடுத்து வந்தனளோ என ஒன்னலர் உட்பட அனைவரும் அதி சயித்தனர்.

ஐந்து இடங்களிலே அரும்போர் நடந்தது. ஒவ்வொன்றிலும் சிக்கிய வீரர் சிங்கம் போல் கர்ஜனை புரிந்து, எதிரியை மடக்கி மடக்கி யடித்தனர். இராஜபுத்திர ரைப் போல் சிக்கியரும் போர் வெறி கொண்டவர்கள். சண்டையில் புகுந்து விடின் வெற்றிமாலை, வீர சுவர்க்கம் ஆகிய இரண்டிலொன்றைத் தவிர வேறெதனையும் சிக்கியர் சிந்தியார். தேனீ தேன் திரட்டுவதுபோல், கொஞ்சம் கொஞ்ச மாக மண்சேர்த்து வந்த வர்த்தகக் கூட்டத் தார் தங்களது பிற்கால கதி யாதாமோ வென ஏங்கிக் கலங்கி இடிந்து போயினர். எனி னும் பிரித்தாளும் தந்திரத்தில் பேர் பெற்ற அப் பேர்வழிகள் நாள்தோறும் சந்திரமதி

யின் சேனையில் பிளவு உண்டுபண்ணி வந்தார்கள்.

தளகர்த்தரின் துரோகம், வீரரின் படு சாவு, புற்றீசல் போல் கிளம்பும் பகைப்படை, இம்மூன்றையும் ஏக காலத்தில் ஒரு பெண் பால் எத்தனை காலம் எதிர்த்து நிற்க இயலும்! ஆதலின் அவளது சீக்கிய சேனைகள் சிதறலாயின. கொக் கொக்க கூம்பும் பருவத்து என்ற முதுமொழியைக் கடைப் பிடித்து, விரைவில் வரவிருக்கும் நற் காலத்தையும் எதிர் நோக்கி, விதியின்றி வர்த்தகக் கூட்டத்தாருடன் அந்நல்லாள் ஓர் உடன்படிக்கை செய்து கொண்டாள்.

ஒரு சமயம் தனது சேனை தோல்வியுற்றது என்று தளகர்த்தனொருவன் வந்துரைத்த காலையில் அவள் பதறவில்லை. "அங்ஙனமாயின், மீண்டும் எனது அருமை மக்கள், சீக்கிய வீரர், போர் புரிந்தாக வேண்டும்." என்று அமைதியுடன் அறைந்தனள்.

அமைச்சனொருவன் அரசியை அணுகி, "அன்னாய்! போரை நிறுத்தி



விடுதலே சாலச் சிறந்ததாகும்" என்றனன். சந்திரமதி அது கேட்டு, "மதியமைச்ச! மகாராஜா இருந்திருப்பின் என் செய்வார்? முடிவு காணும் வரையில் போரை நடத்தித் திருவார் அன்றோ? அவரது அடியாளாகிய யான் அப்பெருமானது அடிச்சுவடுகளைப் பின்பற்றி நடவாதிருத்தல் ஆகுமோ? இந்த உடலில் உயிர் இருக்கும் வரையில் அன்னியர் இப் பஞ்சநதிப் பிரதேசத்தைக் கைப்பற்ற இடங்கொடேன்" என்று சொல்லினள். அவ்வாறெல்லாம் அரசி தீர்மானம் கொண்டிருந்தும், பெருவஞ்சனைக்கு முன்னே அவள் தலையெடுக்க முடியவில்லை. ஆதலினால்தான் சந்திரமதி சமாதானத்தில் இறங்கலானாள்.

அந்த உடன்படிக்கையின் வண்ணம், ஜான் லாரன்ஸ் என்னும் ஓர் ஆங்கிலேயன் பஞ்சநதிப் பிரதேசத்தின் மேலதிகாரியாக அமர்த்தப் பெற்றான். அரசியல் விஷயங்களில் அவனைக் கலந்து ஆலோசியாமல், அவ்வரசி எக்கருமமும் செய்வதற்கில்லை. ஆயினும் குடிமக்களும் வீரரும் அவ்வரசியை அன்னைபோல் நேசித்து நடந்து வந்தனர்.

அது கண்டு வர்த்தகக் கூட்டத்தார் மனம் பொறாமல் அவனை எவ்விதத்திலேனும் அரசைவிட் டகற்ற வழிதேட லாயினர். மீண்டும் தந்திரமே அன்னவருக்குக் கைகொடுக்கலாயிற்று. அப்பொழுது திலீப சிம்மனுக்கு வயது பன்னிரண்டு. அப்பாலனை வசஞ் செய்து, அன்னையை நாடு கடத்த எதிரிகள் ஏற்பாடு செய்தனர்.

ஒரு தினம் அரசி தனது நாட்டையும் மக்களையும் நினைந்து, எங்ஙனம் நலம் பல பயக்கச் செய்யலாமென எண்ணி யிருக்கையில், தூதுவனொருவன் விரைந்து வந்து, "அரசியே! அரசன் கொடுத்த ஓலை இது" என்று ஒரு நிருபத்தை நீட்டினன்.

அதனைப் பிரித்துப் பார்க்கையில், "சந்திரமதி தேவி இக்கணமே நாட்டை விட்டு அகலவேண்டும். இது அரசன் திலீப னது ஆணையாகும்" என்று கண்டிருந்தது.

அரசி "ஆம், திலீபன் அரசன்; நான் அவன் அன்னையாயினும் அவனுக்கு உட் பட்டவள் தானே! ஆதலின், மைந்தனது ஆணைக்கு அடங்கி நடத்தல் என் கடமை. வீர! அரசனிடம் சொல்லுக. இதோ



செல்கின்றேன். என் மைந்தனுக்கு எதிராகச் சதி செய்யத் துணியேன். இனி என்னால் ஆவது ஒன்றுமில்லை. நல்லது! பஞ்சநதப் பிரதேசம் கைதவறும் காலம் வந்து விட்டது போலும்! தனி மனிதனுக்கு வாழ்வும் தாழ் வும் வகுத்திருப்பது போலவே, ஒரு தேசத்துக்கும் அதன் மக்களுக்கும் வாழ்வு தாழ்வுகளை ஆண்டவன் வகுத்துளான்" என்று கூறி, வாயிலில் காத்து நின்ற ஆங்கிலப் படைகள் காவல் புரிந்து வர, சேகாபுரம் போயினள்.

அந்நகரமோ வாசத்துக்கு அவ்வளவு வாசியான தன்று. அரசியை அன்னியர் நாடு கடத்திய துயரம் ஒரு பக்கம், தகாத இடத்தில் அமர்த்தியது இன்னொரு பக்கம், இரண்டும் சேர்ந்துகொள்ள, சீக்கிய வீரர் கொதிக்கலாயினர். ஆயினும், இல்லா விடத்துப் பசியும் செல்லாவிடத்துக் கோபமும் இருந்து என்ன பயன்?

அங்ஙனமே சீக்கியர் விதியின்றி பல்லைக் கடித்துக் கொண்டு நின்றனர். அது கண்டு காசிமா நகரில் வசிக்குமாறு அரசிக்கு ஆணை கிடைத்தது. புண்ணிய காசிக்கு இட்டுச்

செல்கிறோம் என்று தூதுவர் வந்து விளம்பியதும், "ஓ! எல்லாம் ஒன்று தான். காசியில் சிறைபட்டுக் கிடந்தால் என்ன? சேகரபுரத்தில் சிக்குண்டு கிடந்தால் என்ன?" என்றனள் அம் மகாராணி.

அவ் வீரமாது காசி சேர்ந்ததும், தன் மகனுக்காகக் கண்ணீர் வடித்தனளோ! தனது கதியை நினைத்துத்தான் புலம்பினளோ? அரசுரிமை கைதவறியதே என்று கதறினளோ? இல்லை. இல்லை.

"அந்தோ! பஞ்சநதிப் பிரதேசமே! ஆரியரின் அருமைத் தலமே! வேதங்களின் பிறப்பிடமே! வேள்விகளின் விளை நிலமே! வீரரின் வாழ் விடமே! உபநிஷத்துகள் ஓங்கிய உயர் நிலமே! ஒன்னலரைப் புறங் காணும் பெரு வீரரின் தாயகமே! மகா பாரத யுத்த காலத் தொட்டு மகிமை பெற்ற மகிதலமே! அன்று முதல் இன்றளவும் அன்னியரை அண்ட விட மறுத்த மாண்பிடமே! வீரரின் இரத்தமே ஆறாக ஓடும் வீறு கொண்ட தலமே! ஒன்று இரண்டு அல்ல, ஐந்து நதிகள் சேர்ந்து சிறப்பளிக்கும் சீரிய இடமே! சீக்கிய குருமார்களை ஈன்



றெடுத்த இன்னிலமே! நீ உனது கீர்த்தியும் வாழ்வும் குலைவையோ? அன்னியரின் கையில் சிக்குண்டு, அலக்கண் உறுவையோ? மகா ராஜா இரஞ்சித சிம்மன் என் கனவில் தோன்றி, காரிகையே! கை விட்டனையோ என்தன் தாயகத்தை? என்று கேட்டால், அதற்கு என் செய்வேன்? யாது பதில் கொடுப்பேன்?" என்றே அச்சந்திரமதி புலம்பி நைந்தனள். அப்புலம்பல் காரணமாக அவளது மனம் விண்டு போக அவளுக்கு நோயும் பிடித்தது.

அச்செய்தி சீக்கியருக்கு எட்டவே, அன்னையும் தெய்வமுமான வீரமாது ஆவி துறப்பதோ என அன்னார் கொதிப்புக் கொண்டனர். வர்த்தகக் கூட்டத்தினரின் இராஜ தந்திரமும், சீக்கிய சுயநலமிகளின் பெருந் துரோகமும், அக் கொதிப்பை அடக்கவோ தணிக்கவோ இயலவில்லை.

மீண்டும் சீக்கிய யுத்தம் மூண்டது. அப்பப்பா! அதன் கடுமையை ஆரே உரைப்பர்? கூண்டிலிருந்து விடுபட்ட சிங்கம் போல் சீக்கியர் சீறிக் கிளம்பி, எதிரிகளைப் போரில் புறங் கண்டு வெற்றி

மாலை சூடி விழாக் கொண்டாடினர். அப்பால் அர்ச்சிக்கியர் சோர்வுண்டு கிடப்பதைக் கண்ட எதிரிகளோ பெருமிதத்துடன் கிளம்பி அன்னாரை நசுக்கி விட்டார்கள்.

மகா ராணியோ காசி நகரிலே ஆதரிப்பார் யாருமின்றி நோயினால் வருந்தியதை ஆண்டவன்தான் அறிவான். சந்திரமதியும் தமயந்தியும் தனியே துயருழந்த தாகப் புராணங்கள் புகலும். ஆயினும் அப்பெருந் தேவிகளின் துயரம் எம் மாத்திரம்?

ஜன்னிபாத ஜுரம் கண்ட காலத்தும் சந்திரமதி யாது பிதற்றினள்? "சிக்கிய சிங்கங்களே! போர் முனைக்கு ஏகுங்கள். வைரியைப் பிளந்து எறியுங்கள், பஞ்சநதிப் பிரதேசத்தின் மானத்தைக் காப்பாற்றுங்கள்; நீங்கள் ஆண் பிள்ளைகள் அல்லரோ? குரு கோவிந்த சிம்மனது போதம் உங்கள் இரத்தத்தில் ஊறி யிருக்க வில்லையோ? முன்னாளிலே பாலரும் விருத்தரும் பெண்டிரும் பிறரும் சிக்கிய ஜாதியின் மானத்தைக் காக்க உரைக் கொணாப் பாடுபட்டதை அறியீரோ? ஆதலின் கிளம்புங்கள். வெற்றி மாது உங்களை ஆசீர்வதிக்கக் காத்து நிற்கின்றாள்; வீரசுவர்க்கமும் நெருங்கி நிற்கின்றது"



என்று மகாராணி சந்திரமதி கூறிக்கொண்டிருந்தனள்.

அத்தகைய பரிதாப நிலைகண்டு ஆங்கில அதிகாரி யொருவன் சற்றே மனமிரங்கி, "கடைநாளிலே புத்திரனது அருகிலிருப்பின் அரசிக்கு ஆறுதலாயிருக்கும், சாகும்பொழுது அவள் சபித்துவிட்டுச் செல்லவேண்டாம்" என்று எண்ணி, அவளை இங்கிலாந்துக்கு அனுப்பக் கல்கத்தா கொணர்ந்து சேர்த்தான்.

சந்திரமதியைச் சிறை செய்தபின் திலீபனிடமிருந்தும் அரசைப் பறிக்க அரிய சூழ்ச்சிகள் நடந்தன. அப்பாலனோ தனது காளைப்பருவத்தில் மதிமோசம் கொண்டு, கிறிஸ்தவ மதத்தைத் தழுவினன். உடனே ஆண்டு தோறும் ஆயிரக் கணக்கில் ஆடம்பரச் செலவுக்குப் பணம் பெற்று, அம்மைந்தன் இங்கிலாந்து சென்று, அங்கே ஓர் ஆங்கில மாதை மணஞ்செய்து கொண்டான்.

அதுவே சொர்க்கமென அவ்வாலிபன் கொண்டு, ஆடலிலும் பாடலிலும் காலங் கழித்து வரலானான். அச்சமயத்தில்தான் மகாராணி சந்திரமதியை இங்கிலாந்துக்கு அனுப்ப ஒரு கப்பலில் ஏற்றினர். அரசையும்

415.2
N30.2



மதத்தையும் இழந்து, ஆண்மையின்றிக் கிடக்கும் புதல்வனைப் பார்க்கும் துர்ப் பாக்கியம் அவ்வரசிக்கு நேரக்கூடாதென ஆண்டவன் கருதினன் போலும். வழியிலே அத்தேவி ஆவி நீத்து, இரஞ்சித சிம்மன் இருக்குமிடம் நாடிப்போயினள்.

அம்மாதரசியின் உடலைப் பூமியில் புதைப்பின், அம்மண்ணும் வீறு கொள்ளும் என்று கருதினர் போலும்! கடலகத்தே அச் சவம் அடக்கம் செய்யப் பட்டது.

அரசி ஆவி நீத்த பின்பும், சீக்கியர் கொதிப்புக் கொண்டு கிளம்பினர்; வர்த்தகக் கூட்டத்தாரின் நிலைமை இங்கே வரவரக் கேவல மாயிற்று. அதனால் தேச மெங்கும் கலகமும் கொந்தளிப்புந் தலை மிஞ்சி விட்டன. அச்சமயம் இங்கிலாந்தை ஆண்டு வந்த விக்டோரியா மகாராணியார் இத்தேச அரசியலை யும் ஏற்றுக் கொண்டு, இதம் பல புரிந்து, தேசத்தின் தவிப்பைப் போக்கி நலம் பல செய்யலானர்.

68596

இரண்டாம் பாகம்

முற்றிற்று.

---

Printed at Vaman Press, 149, Broadway, Madras.